গণবাণী

Vl. No. 41 11 Oct 1928

[illegible]
[illegible]
[illegible] 28.1.41
[illegible]

Reg. No. M. 2324. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்
வாரப் பத்திரிகை.

வருஷ சந்தா
இந்தியா, பர்மா, ஸிலோன் ரூ. 7 8 0
புற நாடு ... ... ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை

Vol 1.] 1928ஆ அக்டோபர் மீ 11உ [No. 41.

20 NOV 1928

பொருளடக்கம்.

		பக்கம்.
1.	தலையங்கம் (Leader).	801
2.	காந்திமதி (A Novel). T. N. சேஷாசலம் B. A., B. L.	803
3.	அரிஸ்தோத்லன். T. R. இராஜகோபால்	805
4.	தமிழ்ப் பாடம்.	807
5.	சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும். T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A., B. L.	810
6.	கம்பராமாயணம். T. N. சேஷாசலம் B. A., B. L.	812
7.	அகப்பொருள் வரலாறு K. இராமரத்நம் ஐயர் B.A.	815
8.	வர்த்தமானம்.	819

189024

கலா நிலயம்.

அரசியலும் அரவிந்தரும்.

II

ஆங்காங் கொரோவழி உத்தம சித்தமுடையவராய அரசியல் வாதக் கட்சியினர் தம்வரையில் இருக்கின்றன ரென்பதை மறுக்க இயலாதேனும், இற்றைநாள் நம் நாடு சேறுய்க் குழம்பிக் கிடக்கின்ற தென்பதையும், ஐம்புல னுணர்ச்சியும் அழிந்தாலன்றி, மறப்பதற் கியலாது. நல்லோர் சிலர் முன்னின் றிருக்கவும், நாடிய பொருளும் கைகூடாது, வறுமை பொய் ஆதியாய தீமைகளால் விளையும் அமைதியற்ற நாட்களே நாட்டின்பால், உலகின்பால், யாவர்மாட்டும் தொடர்ந்து நடப்பதற்கும் காரணம் யாதென ஓர்ந்துரைப்பது எளியதோர் கருமம் அன்றெனினும் எம்மால் இயன்ற பரிசு வகுத்துரைப்போமென முன்னாள் கூறினோம்.

மிகவும் சுலபமாயிருக்கின்ற சில செய்திகளை மாந்தர், அவை சுலபமாயிருக்கும் காரணத்தினாலேயே, இடைக்கிடை மறந்துவிடுகின்றனர். விண்மீனைக் காணவேண்டுமென்பது கருத்தாயின், அன்னதற்கு ஏற்றவாறு தலைஉயர்த்தி அண்ணாந்துநோக்காமல் கீழே குனிந்து தரையில் தேடினால் காணப்படாதென்பது பலருக்குத் தெரிவதில்லை. மற்றவரை உயர்த்துவதென்றால் தாமே அந்நிலைக்குத் தாழ்வதன்று என்பதை, முயற்சியாலும் தெரிந்துகொள்ளும் ஆற்றல் எய்தாதவர் இருக்கின்றனர். இதனைக் கல்வித் துறையிலும், அரசியல் முறைகளிலும், ஆசார அநுட்டான வகைகளிலும், மாந்தருக் குரிய பிறவற்றிலும் காணலாம். ஆதலால், உயரிய நோக்கமும், அதனைத் தாங்குதற்கு வேண்டிய தூய்மையும், ஆற்றுதற்கு ஏற்ற சுயஆற்றலும், கல்வி செல்வம் செல்வாக்கு முதலிய துணைப் பலங்களும் யாவும் வாய்க்கப்பெற்று நாட்டின் முதன்மையோராய்த் தோன்றியவ ரெல்லாரும் வர வர உருவம் கலைந்துபோய், அன்னார் விளம்பும் வார்த்தை ஒன்றிரண்டு காதிற் படுவதல்லால் வேறு சில அவர் இருப்பதற்குக் கரியின்றி மறைந்துவிடுவதே அவருடைய பரம்பரை தருமமாவது ஆச்சரியமல்லவே. ஒலிகடலிடையே உலகின் இருளகற்றவேனென வெண்மதியமேபோல் தோன்றி வரவர அவர் மின்மினியாய்த் தேய்ந்துபோவது விந்தையே யெனினும், அரசியலாதி சனசமூக விவகாரங்களில் இது காரணகாரிய மென்னும் வலிய விதிக்கு அடங்கியே நிகழ்கின்றது.

இக்காரணங்களில் முக்கியமானது யாதெனில், நாட்டினை நடத்தி வைக்கும் தலைவர்களாய்த் தோன்றுவார் யாவரும் தாம் தாம் ஊமைச் சனங்கள் கோடானு கோடிகளுக்குப் பிரதிநிதிகள் என்று தம்மைச் சொல்லிக்கொள்ள வேண்டிய அவசியத்திற்கு ஆளாயிருத்தலே யாகும். ஒன்றுமறியா இப்பேதைச் சனங்களுக்கு உற்ற குறைகளைத் தீர்த்தற்காகவே தாம் முன்னிற்கின்றனர் என்றால், அச்சனங்கள் இவர்களைத் தலைவர்களாக ஏற்றுக்கொள்வது இன்றியமையாத தாகின்றது. ஆதலின் இத்

தலைவர் எவ்வாற்றானும் அவ்வூமைக் கோடிகளின் ஆதரவைப் பெறவேண்டியவர்க ளாகின்றனர். ஆதலின் இத்தலைவர்கள் அச்சனங்களுக்கு என்னவித நன்மைகளைச் செய்ய வேண்டுமென்று நினைத்து முன்வந்தார்களோ அவைகளைச் செய்யப் புகுவதன்முன் அவர்கள் தம்மைக் கொண்டாடுவதற்கு ஏற்றவைகளிலேயே தம் முயற்சியைச் செலுத்தத் தலைப்படுகின்றனர். ஜனங்களோ இவர்களது கருத்தின்படி ஊமைகளாதலால் தங்கள் குறைகள்தான் யாவை யென்று செவ்வனே சொல்லும் திறம் அவர்களுக்கில்லை. எனின், "உங்கள் குறைகள் இவைகளன்றோ, இவைகளன்றோ" என்று தலைவர் உண்மை சிலவும் கற்பனை சிலவுமாய்க் கலந்து கேட்க, ஊமைகள் செவிடுமாதலால், அதனையும் சரியாய்ச் செவியுட்கொள்ளாது, 'ஆம், ஆம்' எனத் தலையசைக்க நேர்கின்றது. இத்தனைபேர் ஒருவனுக்குத் தலையசைத்துக் கைதட்டிச் சிலசமயம் மாலையும் போட்டுவிட்டால் அவன் தலைவன் என்னும் நிலைமைக்கு உரியவனாகின்றான். இப்படித் தலைமை வகிக்க முயல்கின்றவர்களில் எல்லாருமே இதனால் சுயநலங் கருதிச் சனங்களை வஞ்சிப்பதன்றி வேறு நோக்கமற்றவர்க ளென்று எண்ணவேண்டா. பெரும்பான்மையோர் அந்நோக்கங் கொண்டே புறப்பட்டவரானாலும், ஒரு சிலர், மெய்யாகவே ஜனங்களுக்கு நன்மையொன்று செய்யவே சித்தங் கொண்டு, அந்நன்மையைச் செய்துவைத்தல் தமக்கு இயல்வதாகும்பொருட்டு அதற்கு முதற்படியாய் இவ்விதச் செல்வாக்குப்பெற நினைப்பவர்களும் உளர். நாமிங்குப் பேசுவது இப்பின்னினத்தவர்களைப் பற்றியே யாகும்.

இனி, இவ்விதம் பெற்ற மதிப்பைப் போற்றிவரல் வேண்டும். ஒருவர் நம்மைக் கொண்டாட வேண்டுமென்றால் நாமும் அவரைக் கொண்டாடிவரவேண்டு மென்பது மானுட இயற்கையில் தெரியக் கிடக்கின்றது. ஆகையால் இச்சனங்களது இயற்கை யறிவைப் பாராட்டுவது ஒருபோதும், ஏழ்மையைக் கண்டு பரிவுகொள்வது மறுபோதும், இவர்களுக்கு வேறு பிறர் சூழ்கின்ற தீமைகளினளவைப் புனைந்துரைப்பது எப்போதுமாய்க் காலங் கழியாது என்செய்யும். தலைவர்கள் எண்ணிய நலங்களைச் செய்துகாட்டல் ஒருநாளி லாகாது. அதுவரையில் சனங்களைப் பொறுமையாய் வைத்திருப்பது எளியதல்லவே. எனின், இனிவரும் நலங்களைப் பற்றிய இனிய சொற்களால் அவர்களைத் தாலாட்டி அமரச் செய்வதில் எஞ்சியகாலமும் கழியலாகின்றது.

இன்னபடி கருதிய கருமம் தொடங்காமலே அதற்கு வேண்டிய ஆதாரங்களை அமைத்துக் கொண் டிருக்கும்போது, அவ்வூமைகளுக்குள்ளே உளறுவாயர் சிலர், தலைவர்களாய்த் தோன்றி யிருப்பவர்களது புகழினது நிழலில் தம்முடைய பேரும் சிறிது விளங்கலாமென்னும் ஆசையாலும், சிற்சில சமயங்களில் வயிற்றுப் பிழைப்பிற்கு இதுவுமோர் வழியென உட்கொண்டும், அவர்களை வந்து அடைகின்றனர். இவ்வாறு வந்தடைந்தவர் தம்மைத் தலைவர் ஏற்றுக்கொள்ளும்பொருட்டு இச்சகம் பல பாடுவதியற்கையே. எத்தனை அறிவாளியா யிருப்பவனும் தன்னைப் புகழ்வோனுக்குச் சிறிதேனும் வயமாகாமல் தப்புவ தரிது. அதுவு மல்லாமல் இவர்களைக்கொண்டு ஜனங்களுடைய நன்மதிப்பைப் பின்னும் அதிகமாகப் பெற்றுத் தாம் கருதிய நன்மைகளைக் கடிதின் முடிக்கலாகும் என்னும் நம்பிக்கையும் விளைவதால் அவர்களைத் தலைவர்கள் விரும்பி வரவேற்கின்றனர். மேலும் நம் சரித்திரத்தில் 'எலக்ஷன்' ஒன்றினுள் தலையிடாது தீராது. அதற்கு வேண்டாதார் யார்!

தமக்குக் கல்வியாலேனும் குணத்தாலேனும் மற்றுச் சிந்தையின் தூய்மையாலேனும் இணையாகாத மாக்களின் ஊடாட்டம் தலைவர்களுக்கு உண்டாக நேருமாறு இவ்வாறு. தலைவர் என்பவர் ஒருவரும், அவரைச் சூழ்ந்து தொடர்பவர் சிலருமாய் விவகரிக்கக் காணுமிது இரண்டாவது படி. இதன்மேல் நடைபெறும் காரியங்களைச் சிறுபிள்ளைகள் விளையாடும் 'இரயில் விளையாட்டை'க் கருதி நோக்கின் காணலாம். நாலைந்து பிள்ளைகள் கூடி அவர்களுள் ஒருவன் தான் "எஞ்சின்" என்று சொல்லிக்கொண்டு முதல் வந்து நிற்கின்றான். மற்றவர்கள் ஒருவனை ஒருவன் பிடித்துக்கொண்டு இவ்வெஞ்சினைத் தொடர்ந்து வண்டிகளாக நிற்கின்றனர். எஞ்சின் என்ற பையன் ஊ என்று ஊதிவிட்டு முழங்கையை மடக்கி முன்னுக்கும் பின்னுக்கும் ஆட்டிக்கொண்டு 'குப் குப் குப்' எனப் புறப்படுகின்றான். வண்டிகளா யமைந்த பிள்ளைகளும் சிறிது தூரம் எஞ்சின் போகும் நெறியே போய்க்கொண்டிருப்பர். ஆனால் கூடத்தை இருமுறை சுற்றி வருவதன்முன் எஞ்சின் பிள்ளையைப் போலவே மற்றப் பிள்ளைகளும் தம்மையே அறியாமல் ஒவ்வொருவராய்க் கையாட்டத் தொடங்குவர். இப்படிச் சிறிது செல்ல வண்டிகளும் 'குப் குப்' என்ன ஆரம்பிக்கும். இது எஞ்சினிற்கு அவ்வளவு சம்மதமாயிராது. ஆயினும் வண்டிக ளிருந்தால்தானே தானும் எஞ்சினா யிருக்கக்கூடும் என்று தெரிந்து எஞ்சின் பிள்ளை மற்றப் பையன்களைப் பார்த்து, "நீங்கள் கை யாட்டாமல் 'குப்குப்' என்னாமல், சும்மா என்னைத் தொடர்ந்து வாருங்கள்" என்று மெல்ல வேண்டிக்கொள்ள, அப்பிள்ளைகள் உடன்படுவதுபோல் தோன்றினாலும் மறுநிமிடம் குப் குப்பும் கையாட்டமும் வந்துவிடும். அப்புறம் இதுதான் 'ஸ்டேஷன்' என்று எஞ்சின் ஓரிடத்தில் நின்றால், வண்டிகளோ 'அதுதான்' என்று பின்னிருந்து தள்ளும். எஞ்சின் என்ற பேரும் முதல் நிற்கின்ற நிலையும் வேண்டுமானால் வெறுப்புடனேனும் வண்டிப்பிள்ளைகள் தள்ளுகிறபடி பொறுமையோடு இவன் போகவேண்டியது தான். எஞ்சின், வண்டிகளை இழுப்பதுபோக வண்டிகள் தள்ளத் தலைப்படுகின்றன. இருந்தாலும், எஞ்சின் தான் என்னும் நினைவு இடைக்கிடை இவனுக்கு வரத் தள்ளும்வண்டிகளைச் சிறிதும் சினந்து திரும்பிப் பார்த்தானோ, வண்டிப் பிள்ளைகள் கூ வென்று கத்திக்கொண்டு திக்குக்கு ஒரு எஞ்சினாய்க் 'குப் குப்' என்று ஓடிவிடும். கட்சித் தலைவர்களது கதி பெரும்பான்மை இந்நிலைக்கே வந்து சேர்கின்றது. எஞ்சின் விளையாட்டின் பொருத்தத்தை அங்கமங்கமாய் விளக்கிக் காட்டுவது இங்கு மிகை.

காந்திமதி என்னும்

காந்தாரநாட்டுக் கட்டழகி.

(796-வது பக்கத் தொடர்ச்சி)

33. மாண்டார் வருவாரோ.

வாளும் உறையும்போல் விராடனோடு மடாதிபதியும் பொருந்தி நிகழ்கின்றாரெனவிச்வகேசரி விளம்ப வாங்கே வெண்டாமரையாய் அவர் விளர்த்துநிற்க நேர்ந்தவிதம் இன்னதென முன் கண்டோம். தான் இழைத்த குற்றத்தை நீக்குதற்கு நிகழ்ந்ததை இனி உரைப்பதே உற்ற முறையென் றெண்ணி, "வேந்தே, நின்வசை மிகையன்று. தீராதபழியே பூண்டேனியான்" என்று மடாதிபதிபுகல்வதனின் முன்னே, இதுகாறும்கதவின்மூலையில் மறைந்து ஒற்றிக்கொண்டு நின்ற விராடனே வந்தவர்க்கிடையே தோன்றினான். அன்னவனை யரசன் கண்ணெடுத்துப் பார்க்காமல், "சுவாமிகாள், யாது புகன்றீர்?" என வினவுகையில், விராடன் மடாதிபதியின் கண்களுள் தன் கூரியபார்வையை ஒருமுறை செலுத்தி, "இறைவா, குன்றத்தவர் இந்நாள் கருதிவந்த போரிற்குக் காலம்கடந் தகல்கின்றது. இன்னுமேன் தாழ்கின்றாய்? விரைவினி லெழுந்திரு" என்று சொல்லிக்கொண்டே தனதண்ணனிற் கருகுவந் தருமையாய் உட்கார்ந்தான். அரசனுடைய உடல் அவனையறியாமலே கூசியது. நண்ணிய தம்பியின் உடல் தன்னைத் தீண்டாவண்ணம் இரண்டுசாண் நகர்ந்து விலகினான். "அண்ணா, என்மொழி கேட்கவில்லையோ!... எழுந்திரு, எழுந்திரு" என்றனன் விராடன்.

"என் மனமோ விழுந்திருக்கின்றதே, விராடா! நின் செய்தியொன்று மெனக்குச் செவ்விதாகத் தோன்றவில்லை. நேற்றிரவு நம்பால் எம் மைந்தனைப்பற்றிப் பேச வந்தவர் யாவரெனப் புகன்றபின் மேலினி உரைப்பதற்குளதாயின் உரை."

"இது கேட்கவோ அண்ணா, நின்முகம் இப்படிக் கறுகுகின்றது? எமதிளவல் இன்று காலை இங்கு வருகின்றான் என்று சொல்ல முன்போந்தவர் அவர்," என்று விராடன் மடாதிபதிக்குக் கட்கடைபோக்கி அரசனுக் கியம்பினான்.

"மற்று, எனவன் இதுகாறும் வந்திலன்?"

"வருவன், வருவன். பிராதபதீரர் மாளிகைநின்று சித்திரமோகன மாளிகைக்குப் போயுளானன்றோ! அங்கிருந்து பொழுதுவிடிந்தபின் புறப்பட்டு வருதற்கு இன்னுமே நேரமாகும். அதுவன்றி நம் சிறுவன் சித்ராங்கன் வரும் வழியில் சரசஞ்செய்து தாழ எத்தனை மாதரோ... ....அண்ணா, நீ எழுந்திரு............அங்குப் பார், களத்தினில் வீரர் கூடிவிட்டனர்........நகரமாக்களும் குழுமியுள்ளார். இன்னுமே தாழ்வது நமக்கழகன்று."

"அல்லடா, விராடா, நள்ளிரவிற் போந்த தூதர் நவின்றமொழி நயமாயிருந்ததில்லை. உள்ளதை மறைத்து நீ உரைக்கின்றாய். தம்பி, என்மனம் புழுங்குகின்றதே இரக்கமில்லையோ என்பால்! அடிகாள், நீவிருமே வாய்மையை எங்குகுத்தீர்—பழியே பூண்டதாய்ப் பகர வந்த நும் மொழியை எம்பியோ விரைவிற் றோன்றி விழுங்கி விட்டான்."

அரசனிவ்வாறு பதைப்பதைக் காண மடாதிபதியும் மனம் புழுங்கினார். இதற்கிடையில் விராடன் வெளி நிகழ்வதைப் பலகணிவழியாய்க் காண நினைத்தான் போல் எழுந்திருந்து அரசனுக்குப் பின்புற மொதுங்கி அங்கிருந்து, "உண்மையை உரைத்தால் இவனாவி இங்ஙனே நில்லாது கழியும். ஆதலால் இவன்பால் இரக்கமுண்டேல் நிகழ்ந்த உண்மையை விளம்பற்க" எனப் பொருள்படும்படி மடாதிபதிக்குக் கண்ணாலுங் கைகளாலுஞ் சாடைபோக்கவே, பின்னிருந்து இவன் கை நிழல் சுவரிலா டக்கண்ட வேந்தன் மறுக்க மெய்திக் கண்பஞ் சடையுங்காலைக் காலனேர்விடு தூதரைக் காண்பவர் கலங்குமாறு கலங்கிச் சோர்ந்தான்.

எது எவ்வாறாயினும் தன்னரும் வாய்மையும் தூய்மையும் மன்னவன் அயிர்ப்பதற்கு இடனிலாவகை இனி நடந்துகொள்வதே தக்கதெனத் துணிந்த மடாதிபதி, விராடன் வகுத்த நாடகக் குறிப்பைப் புறக்கணித்து, உயிர்நிலை தளர்ந்துவாடும் அரையன்பா லணுகி, "வாழி, வேந்தே. நெடுநாள் நிலைநிற்கவரு நின்குலம் விளங்குக! எங்குமாய் யாவுமாய் என்றுமாய் நிகழ்கின்ற எமதருட் பெருந் தனிமுதல் கருணையாற் கோமகற் கியாதுந் தீதிலதாகுக. நின் நண்ணலார் கண்ணழிக. அவர் கருத்தெலாங் கருவிலே கழிக... ...." எனத்தன் பாயிரத்தை முடிக்காமுன் அரசன் இளகிய குரலால், "அடிகாள், அஃதன்று, அஃதன்று அன்னவர்க்கு இறைவனருளால் நன்மதி தோன்றுமா வாழ்த்துக" என நவின்றனன்.

"வேந்தனே, நினது இன்னருளை வியந்தேன். உனக்கு வஞ்சனை நினைப்பார் நெஞ்சிற்குக் கல்லும் இரும்பும் நொய்ய பஞ்சிற்கே நேர். மன்னவா,......என் செய்கேன்......உரைத்தற்கோ என் நா எழ வஞ்சுகின்றது"

"கேட்பதற் கிருக்கும் என் புன்செவியினும் நும் நா பகர்தற் கஞ்சுமெனின் நுங் கூற்றுக் கொடியதே...... விராடா, நீயேனுங் கூறுதற் கிசையாயோ!"

"அண்ணா, அகிலாண்டேச்வரர் ஏதோ பழங்கதை பகரப் பார்க்கின்றார்போல் தோன்றுகின்றது, அஞ்சவரும் சொற்கள் அவர் வாய்நின்றே வருத்தட்டும், பின்னர் யான் நன்மருந் தளிக்கின்றேன்," என்று தன் பற்களைக் கடித்துக்கொண்டே கூறினான் விராடன். இரங்கிய தன் சிரத்தை அரசனும் சிறிது நிமிர்ந்து, "நீவிர் இருவீரும் என் மனதை இருபுறத்திலும் ஈர்த்து வலிக்கின்றீர். உடைந்த மனத்தினாலே இக்கிழவுயிர் போனபின் விடத்திற்கு நோகாது, மருந்திற்கு மாறாது, என் செவி. உரைகூட்டி, 'இதுவோவிடயம்' என வினவுதற்கும் நடுங்குகின்ற தென்னுளம். இஃதுரைமின், என்னருமைந்தன் இன்னும் உயிருட னிருக்கின்றானோ?" என்று சுற்றிநின்ற சுவரும் இளகக்கேட்டான்.

"இருக்கலாம்" என்றார் மடாதிபதி.

"இருக்கின்றான்" என்று சேத்ததிற் சிறிதும் சந்தேகமில்லாத கபடன் விளம்பினான்.

'எதனை யான் ஏற்றுக் கொள? பாவிற் படு குழல் போல் என் மனதை இருபுறத்தும் எற்றுகின்றீர்" என மொழிந்தனன் வேந்தன்.

"கடவுளருளால் அவன் ஆவியொ டமைவானென்றே எண்ணுகின்றேன்." என மீண்டும் மடாதிபதி உரைத்தனர்.

"என்னுடைய முயற்சியால் நம்மொரு புதல்வன் ஆவியுந்தானுமாய் அழகுபெற இருக்கின்றா னென்று அறிந்துளேன்" என்றனன் விராடன்.

" இனி என்! மன்னவா, இன்னவாறு நாங்கள் சொல் விலக்கி இங்குச் சோருங்கால் அங்குச் சித்ராங்க னுயிர் சிதைந்திட நேரினும் நேரலாம்......சித்ரமோகன மாளிகையில் சித்ராங்கன் பகைவர் கைப்பட்டுச் சிறைகிடப்பதாகக் கூறவே வந்தனர் இரவுவந்த நால்வரும். வேந்தே, காவற்படை யொன்று அவ்விடை விடுப்பது நலம்."

அகிலாண்டேச்வரர் இதனை உரைத்தபோது அவர் வாயே பார்த்திருந்த விராடன் சற்றுந் தாழாது, " ஆம், உண்மையே. மற்று, இஃதுரைத்தது நானே என்பதை எனிவர் மறந்தாரோ, அறிகிலேன்" என வியந்தவன் போல் தன் வெறுப்பையே காட்டினன்.

"ஆம், மறந்தேன். வந்தவர் இளவரசன் நடுக்கணுற்றிருக்கின்றான் என்பதுமட்டுமே கூறினர். இதனை முன்னரே அறிந்திருந்த விராடபத்திரர் அவ்விடுக்கண் அவன் உற்றவாறும் அது தீர்க்கத் துணைப்படை தான் அனுப்பியதையும் செப்பினர்" என அகிலாண்டேச்வர சுவாமிகள் தனதுரையைத் திருத்திக் கூறினர்.

" அனுப்பிய படையும் பகைகொண்ட பாதகரைச் செற்று எமதரும் புதல்வன் இன்னுயிரைக் காத்தனர் என்னுஞ் செய்தி இன்றுகாலை யெனக்கெட்டியது. ஆதலால், அண்ணு, கவலற்க. மலையென வந்த தீங்கு பொடியெனப் பிதிர்ந்து போயது" என்று விராடன் சாற்றினன்.

அரசனின் நிதுகாறு மகன்றிருந்த உயிர்ப்பு முணர்வும் மீண்டன. " விராடா, மெய்யேயோ விது! மற்று, எளியனேன்பால் பரிவால் பகர்கின்றாயோ......இன்று காலை எம் மகன் வருவதுணர்த்தவே நேற்றிரவு போந்த ஆட்கள் போந்தனர் என்று நீ சற்றுமுன் சாற்றியதேன்? பொய்நின்று மெய்யைப் பிரிக்குமாற்ற லில்லேனுய்த் தவிக்கின்றேன்," என்று விச்வகேசரி நெட்டுயிர்ப்பு வீங்கினன்.

" முன்னவனே, என்பாலுனக்குச் சிறிதேனும் அன்புளதாயின், மற்று நின்பால் எனக்குள அன்பை எவ்வளவேனும் அறிந்துளாயேல்,இன்னவாறு நீ உரைத்திடாய். நின்செவி தீயத்தீயச் சொற்கள் சொல்லவோ யான் பின் பிறந்தேன். நின்மகன் என்மக னல்லனே! வினையாற்ற நினைத்தே னல்லாது வம்போத இசைந்தே னல்லேன். உற்றதோர் தீங்குநின்று உயிர்தப்பினன் என்பதல்லால் முன்னரே நினக்குரைத்துக் கொன்னே வருத்துவான் என்! உளங்குலைந்து மெய்பதறிச் சோர்வதன்றி நீ யாது செய்திருப்பாய். நின்னையுங் காத்தலெனக்கு அரிதாய் முடிந்திருக்கும். இன்னவித நன்மையெலாங் கருதுங்கால் வழங்கிய என்னுரை வாய்மையே யாகாதோ...... அண்ணு, இனித் தாழேல், காலமாருதரும் வஜ்ரதரரும் கடும்போர் புரியக் காத்திருக்கின்றனர் அப்போர் முடியுமுன் வருவான்காண் நம் திருமைந்தன்......எழுந்திரு," என விராடன் அரசனது கரங்களைப்பற்றி மெல்ல எழுப்ப முயல்கையில், வேந்தன், " விராடா, வருவான் என்பதும் முன் நீ உரைத்த வாய்மையின் பாலதேயோ?" வென வினவினன்.

" அண்ணலே, எனக்கு ஓர் ஐயம் உளதெனில் பின்னுஞ் சிலபடையுடன் உதவிக்குச் செல்லாமல் இக்குன்றைக் குன்றப்போர் நிகழ்த்துமாறு தூண்டியிருப்பேனே! இந்நேரம் சித்ராங்கன் தன் மாளிகையை விட்டுப் புறப்பட்டிருப்பான். இக்குன்றவேந்தர் இடும்போரை நின்னுடன் இருந்துகாண இடையே எய்தி நிற்பான் என்பது நிச்சயம். இம்மொழிக்கு ஈடாக எனதுயிரையே பணையமாக்குகின்றேன். அண்ணு, ஐயுறேல்," என்று விராடன், இப்பொழுது உரைப்பதையும்இனி நிகழப் போவதையும் கருதுங்கால் மெய்யையே பொய்யென ஓராது உரைக்கும் பரிசு விந்தையே. எப்படியாயினும் இப்பெருங்குன்றப் போரை முடித்துப் பின் தான் ஆளவிருக்கும் அரசிற்கு அமைதிதேட லிவனுலே, மாண்டவரும் வருவாரென்று வற்புறுத்தவேண்டியது இன்றியமையாத தாகின்றது.

விச்வகேசரி அகிலாண்டேச்வரரது முகம்நோக்கி, " அடிகாள், எம்மகன் பிழைத்தான் என்ற செய்தி நீவிரும் இன்று காலை என்தம்பிக்குக் கூறியவன் வாய்வாக் கேட்டீரோ...... அல்லது மிகுதிபற்றிப் பிழைத்தானென் மைந்தன் என்று விராடன் பகர்ந்து வைக்கின்றானே!" என மேன்மேல் விளைவுறும் ஐயத்தினைக் கழிப்பான் கேட்க அவர், " இச்சொல் எனக்குப் புதுமையே. ஆயினும், அது மெய்தான் என்றவோர் உள்ளுணர்வு ஊக்கம் அளித்து நிற்கின்றது. ஆதலின் ஐய, பொறுப்பைப் பரமனுக்கீந்து நீ இப்பொழுது நிகழவிருக்கும் பெருங்குன்றப் போரில் நினைவைச் செலுத்தினல் இதற்கும் இளவரசன் வருதற்கும் இடைநின்ற நேரமும் எளிதிற் கழியும்," எனத் தேற்றினர்.

சங்கையறத் தேர்ந்தானரசன் என எண்ணுதற் கியலாதாயினும் ஒருவண்ணம் அவன் துயரம் நீங்கி எழுந்து, தனதுடைகளை மாற்றியவாங்கே, " எம் சித்ராங்கன் உயிரிற்கே இறுதிகாணச் சூழ்ந்தவப் பாதகன் யாவன். இப்படுகொலையால் அவன் எய்தும் பயன் யாதுகொல். ஒருவருக்கும் பொல்லாங்கு செய்திரானே, என் பாலகன்! இருந்த திசையையும் எண்ணுது துறந்திருந்த அம்மாளிகைக் கிவன் எவ்வாறு எய்த நேர்ந்தது......பாவம், அப் புன்விதிப் பேதை மந்தாகினி இருந்திலளோ அங்கு?" என்று வினவ, விராடன், " அரசே, ஐயமற அறியுமுன் எவரையும் பழிக்கப்படாது. ஆயினும் நோக இக்கொலை சூழ்ந்தவன் உடன்பிறந்தே கொல்லும் நோயனைய அந் நரபாலன் என்பது நிச்சயம். இப்படுபழிக்கு அவன் தன்னுயிரையே வழங்கியாய்விட்டது ஆனல், மணிவாளமன்னனும் கஜேந்திரஸிம்மனும் இந்நிகழ்ச்சி நிகழுங்கால் அங்கு இருந்தனர் எனத் தெரியலாகின்றது. எக் கருமம்பற்றி இவர்களும் அங்குற்றன ரென்பது அயிர்த்தற் கிடமானதே. இருவருக்கும் இளவரசன்பால் வன்மத்திற்கோர் நிபமுண்டென்று கூறவும் வேண்டுமோ. ஆயினும் இக்கொடுந்தொழில் புரியுமாறு அம்மன்னவர் நரபாலனை ஏவியிருப்பரென நான் தக்க சரிகளின்றி எளிதில் எண்ணி நினது நண்பர்க்குப் பிழையிழைக்க இசைந்திடேன்......எனினும், வேந்தே, பாண்மகள் பைந்நின்றெடுத்த முந்திரிக்கனியினல் அடித்துத் தன் மாதுலனை நம் சிறுவன் பரிபவப்படுத்தியதும் எளிதில் கஜேந்திரஸிம்மனல் மறக்கற் பாலதன்று......தன்மகளை மணக்கவில்லையென்று புகைந்திருந்த மணிவாளனது மனம் உயிர்ப்பகையாய் அழன்றதோ யாதோ! எனினும், இவ்வகை இழிதொழிலாள ரென்று முடிதரித்த இம்மன்னரை எண்ணுவதும் ஒண்ணுது......நமக்கோர் நெடுநாட்பகையாய காஷ்மீரத்தரசனும் அவர்களிடை உறவாடி அங்கு இருந்திரானேல் நானிவ் வெண்ணத்திற்குச் சிறிதும் இடந்தந்திரேன்.........இருப்பினும் இவைகளைச் செவ்விதின் ஆராய்ந்து இனி நோக்குவோம்" என்று வாயால் ஊதுவதும் மூச்சால் அணைப்பதுமாய் அவ்வேந்தர்பால் பகையை அரசனுக்கு மூட்டி வைத்தான்.

"விராடா, உண்மையேயோ, இவையாவும். தத்தம் தானையொடு இம்மூவரும் செருச்செய்திருப்பாரேல் நீ விடுத்த நமதொரு சிறுபடை சித்ராங்கனைக் காத்துவாலெவ்வாறு அமையும்?"

" அண்ணு, உலகெங்கு மொருபங்கென்றால் பன்மடங்கு பற்றிக் கலி இக்காந்தாரநாட்டில் முற்றியதென்றோ உண்மை உரைப்போர்க்குக் காலமிது அல்லாமற் போய்விட்டது! யாது யான் பகரினும், 'விராடா, உண்மையேயோ, விராடா உண்மையேயோ' என ஐயமே தலைகொள்ள நிற்கின்றாய். பொய் சொல்லிப் பிழைக்கவே யானுனக்குப் பின்பிறந்தேன்போலும். வேண்டா, அன்புடைய என் மருமத்தைப் புண்படுத்த வேண்டா!"

"விராடா, முதுமையால் உழலும் என் வாய்வரு சொற்களுக்கு வருந்தாதே. பொறுத்தி. மற்று, இவர் பகைஞராயின் நாம் என் செய்வது!" என்று விச்வகேசரிவேந்தன் மடாதிபதியையும் தளர்ந்து நோக்கினன். அவரும், "வேந்தே, வீணுகக் கவல்வானேன். மாதுலன் ஆகியிருப்போனும் ஆக விழைவோனும் நம் மகற்கு எதிலாராயினரல்லரென்பது இரண்டொருகடிகையில், உம்பி உரைத்தபடி சித்ராங்கன் இங்கெய்தியவுடன் சங்கையறத் தெரிந்துவிடு மன்றோ. பின்னர் நாம் செய்வினை சிந்திக்கலாமே," என்று அறிவுறுத்தினர்.

முன், 'உண்மையோ விராடா' என்ற சொல் அரசன் வினவியதால் தன் மருமம் புண்பட்டது என்னல் விராடனுக்குப் பொருந்தாதாயினும், ஸ்ரீ அகிலாண்டேச்வர சுவாமிகள் வழங்கிய இவ்வுரை எறிவேல் பாய்ந்தால் போல் அவன்மார்பில் தைத்ததற்கு ஐயமிலது. இனிச் 'சித்ராங்கனே வருவானல்லன். வருவதாயின் தன் பொய்ப்பழிக்குப் பொருளாய அவ்வேந்தர் மூவரே வருவதற் கொத்தவர்' என்ற நினைவும் புகுந்திடவே இவ்வஞ்சகக் கள்வனுக்கு மடாதிபதி உரைத்தசொல் தைத்தவழிகனலும் நுழைந்தது போலாயிற்று. வாளொன்று அவன் கையிருந்தால் அம்மடத்திற் கதிபதி மறுநாள் வேறொருவர் ஆதல் வேண்டும். வாளில்லை, வாயிருந்தது; "கடவுளிற் கண்மியராதலால் நம் மதக்குரவர், செய்வினைநாளை சிந்திப்போம் என்று தாழ்கின்றார். கடவுளை நம் பிறோர்க்குக் கருமமொன்றும் சிந்திக்கவேண்டா. அரசனுக்கு அண்மியராய என் போன்றவர் ஆள்வினை அயர்ந்திருத்தல் அறமன்றென மன்னவா, யான் முன்னரே மணிவாளன் முதலாயினோர்க்கும் தக்கபடி சில செய்தமைத் துள்ளேன். அதனைப் பின்னர்க் கூறலாம். இப்பொழுது போர்க்களஞ் செல்லப் புறப்படு" என்றனன்.

" கடவுளை மறந்தேனென்று எனை நேற்றிரவே இடித்துரைத்த புன்மையோய், உன்மதி இன்று எவ்வூர்ப் புறங்காட்டில் உலரப்போயது! சீ! சீ! நல்லனல்லன். வஞ்சகமே வழங்குகின்றாய். எனினும் நின் இறுதியே சூழ்ந்துவிட்டாய்" என்று வெறுத்த மடாதிபதியின்பால் உறுத்தெழுந்தான் விராடன். அரசன் அவர்களைக் கையமர்த்தி, " அடிகாள், விராடா, வெகுளன்மின், இகலன்மின்......போர்தொடங்க நேரமாயிற்று; போதும், வருதிர்" என அவர்களை அழைத்து ஏகினன்.

இப்படி இவர்களிங்குச் சிலநேரம் சூழ்வதும் சிலநேரம் மாழ்குவதும் சிலநேரம் இகல்வதுமா யிருந்தா ரென்றால்,அங்குக் குன்றத்து வீரரும் குழுமிய மக்களும் சலிப்புறுமலும் ஆரவாரஞ் செய்யாமலும் அமைந்திருத்தல் எங்ஙனம்!

T. N. சேஷாசலம்.

அரிஸ்தோத்லன்.

(ARISTOTLE)

(789-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரகிருதி தத்வத்தை இனிச் சுருக்கமாக அறிவிப்போம். பிறவற்றை இயக்குவிக்காது தான் மாத்திரம் இயக்கப்படும் ஜடம் (சக்தி ஒடுக்கம்) ஓர் பக்கத்திலும், தான் இயங்காது ஏனையவைகளை இயக்கும் பரம்பொருள் (சக்தி விரிவு) மற்றோர் பக்கத்திலுமாக இருக்கின்றன. இவைகளுக்கிடையில் சேதனுவ சேதனப் பிராணிகளும் பொருள்களும் நிறைந்து நிற்கின்றன. இவைகளே பிரகிருதி யெனப்படுவது. சக்தி விரிவால், அல்லது பரிணுமத்தால் ஜடத்வம் குறுகி,அல்லது மாறிக் கணக்கற்ற குணங்கள் பெற்ற ரூபங்கள் தோன்றிச் சீர்கெடாது மேன்மேல் நோக்கி வளர்ந்து பெருகிப் பாவிக் கடைசியில் மூலச் சத்தை நெருங்குகின்றன. சீரும் மேனோக்கமும், யாவற்றையும் பற்றித் தொடர்ந்து, இயக்கி யிணைத்து உயர்த்தி வருகின்றன.

விண்ணுலகில், சந்திரன் சூரியன் கிரஹங்கள் நக்ஷத்திரங்கள் எல்லாம், ஒன்றன்மே லொன்றாய் நின்று, முறை வழுவாது, சதாகாலமும் சுழன்றுகொண் டிருக்கின்றனவாம். நக்ஷத்திரங்கள் சித்துஉருக்களாக ஒளிர்வனவாம். இவைகளுக்கு எல்லாம் மேலாக உள்ளது பரம்பொருள். விரித்தலிற் பயனில்லை.

ஸ்தாவரங்களுக்கும் ஜீவன்களுக்கு முள்ள பேதம் யாதெனில், பற்பல அவயவங்களை உண்டுபண்ணி, இவைகளைக்கொண்டு ஜீவலக்ஷியத்தைக் கைகூடிவரச் செய்யும் சக்தியினல் பின்னவை உந்தப்பட்டு எழும்பி வியாபிக்கின்றன வென்பதேயாம். ஜீரண சக்தியும், இனப்பெருக்கும் செடி கொடி விருக்ஷவுலகில் தோன்றுகின்றன; விலங்குகளுலகில்,புலனுணர்ச்சியும் காட்சியறிவும் பெருகுகின்றன. இவற்றினின்று சுகதுக்க வுணர்ச்சிகள் உண்டாகி, சுகத்தை யளிக்கக் கூடியவைகளைத் தேடிச்சென்று, துக்கம் பெருக்கவல்லவைகளை நீக்கி விலங்குகள் ஜீவித்து வருகின்றன. மானுடருலகில், மேற்சொல்லியவைகளுடன் புத்தியும் உள்ளுணர்வும் விரிந்து செழித்தோங்கி வளர்கின்றன. ஜீவகோடிகளுக்குத் தலைமையாக விளங்குபவன் மானுடனே. மானுட சிருஷ்டியே பிரகிருதியின் மனோபீஷ்டமாகும். மிக இனிய சித்திரமொன்றை ஓவியன் வெளிப்படுத்துவதற்குள் பற்பல முயற்சிகள் செய்து இறுதியில் வெற்றி பெறுவதுபோல், பிரகிருதியும் பல சிறப்பட்ட குணங்களும், வெவ்வேறு அவயவங்களும் உருவங்களும் நிறையப்பெற்ற நானுவித பிராணிகளை உற்பவித்துப் பின் மானுடனை வெளிக் கொணர்ந்தாள் போலும். உற்றுப் பார்ப்போமாயின், படிப்படியாய், ஜீவப்பிராணிகள் முன்தாவி மேலெழும்பி மனிதனுள் முடிவுறுவதையும், அவைகளெல்லாம் வீண்முயற்சிப் பலன்களாகத் தோன்றாமல் பரம்பொருளின் உட்கருத்து நிறைவேற்றத்தின் விதம்விதமான அறிகுறிகளென்பதையும் நாம் அறிவோம்.

ஜடம் - ஜீவன், அசித் - சித், ஒடுக்கம் - விரிவுகள் எவ்வாறு சம்பந்தித்திருக்கின்றனவோ, அவ்வாறேதான் பூர்ண அங்கங்கள் பெற்ற தேகமும் ஆன்மாவும் சம்பந்தித்து நிற்கின்றன. ஆன்மத் தோற்றத்திற்குச் சரீரம் அவசியமானது. நடத்தற்குக் கால்களும், சிலைகள் நிரு

மிக்க தக்க சாதனங்களும் வேண்டுவனபோல், உணரவும் இச்சிக்கவும் சிந்திக்கவும் நிச்சயித்து இயற்றவும் பற்பல அவயவங்கள் அவசியமாவன. இவ்வவயவங்களைத் தேகம் பெற்றிருக்கின்றது. இத்தேகத்தின் உதவியினாற்றான் ஆன்மா தன் மேன்மையை வெளிப்பிரஸ்தாபிக்கின்றது. காட்சியறிவு - புலனுணர்வு - கற்பனை - விசாரணை - உறுதி - நினைவு - உள்ளுணர்வுகள் அடங்கப்பெற்றது ஆன்மா. விரிக்கின் பெருகும்.

நல்லொழுக்கங்களின் குணநிசயம் என்னை? ராஜாங்கத்தின் சீர்மை, குடிகளின் குண நடத்தைகளைப் பொருந்தியுளவாதலால், குடிகள் எக்குண நடத்தையரா யிருக்கவேண்டும்? இன்ப வுணர்ச்சியும் நுகர்ச்சியுமே வாழ்க்கையின் லக்ஷண மெனும்பொழுது, இன்பம் என்பதின் பொருளென்னை? இவ்விஷயங்களைப்பற்றி இவருடைய கொள்கைகளின் சாராம்சத்தை இனி அறிவிப்பாம்.

எண்ணம் சிந்தனை கருத்து என்பதின் வெளித்தோற்றமே செயல் என்பது.

செயலில் முடிவுறாத எண்ணம் நிஷ்பிரயோஜனமானது, மனத்திருப்தி உண்டாக்க வல்லதல்ல.

மானுடத் தன்மையை அறிவது மாத்திரம் போதாது. செயற்கைகள் மூலமாக அவைகளை நிரூபித்துப் பலப்படுத்த வேண்டும். ஆற்றைக் கடத்தற்குப் பாலம் ஒன்று கட்டவேண்டுமென்ற எண்ணமும், கட்டி முடித்தற்கான முறையறிவும் மாத்திரம் பயனற்றனவன்றோ? தகுதியான பாலமொன்றைக் கட்டி முடித்தவினின் றல்லவோ எண்ணத்தின் பெருமையும் பயனும் வெளியாகும். இதுபோலவே, நன்மை தீமை,உயர்வு தாழ்வு, அற மறம் என்பனவாதிகளைப் பற்றிய அறிவு மாத்திரம் எந்நன்மை பயக்கும்? நன்மை தீமைகளின் ஏற்றத் தாழ்வுகளை, அற மறங்களின் சிறப்பிழிவுகளை, நடத்தைகள் மூலமாக வல்லவோ ருசப்படுத்தவேண்டும். எப்பொழுதும் மாறிவரும் மானுடத்தன்மையின் தேவைகளுக் கேற்றவாறு, தர்மா தர்மங்களைப் பற்றிய கொள்கைகள் மாறுவன. "இவை அறம், அவை மறம்," என அறுதியிட்டுக் கூற முடியாது. "சில எக்காலத்தும், எந்நிலையிலும், ஒருபடியே நன்மையே பயப்பன, வேறுசில தீமையே விளைப்பன" எனச் சாதித்தற் கியலாது. வைத்தியன் நோய்க்குத் தக்கபடி உபயோக முறையை மாற்றித் திருத்தி ஒளஷதங்கள் கொடுப்பதுபோல், மானுடரின் அவ்வப்போதைய போக்கு தேவை லக்ஷியங்களுக்கானபடி, இறுதியில் நன்மை உண்டாகும் விதம், மூல தர்ம சித்தாந்தங்களை அறிஞர் புதுக்கிப் பெருக்கி மாற்றவேண்டும்.

நம்முடைய பலதிறப்பட்ட நோக்கங்களை நிறைபெறச் செய்வதே அறநூல்கள், அரசியல்களின் கருத்தாகும். போர்க் கருவிகள் செய்பவனுக்கு அதுவே முக்கிய தொழிலாக விளங்கும்; ஆனால், அவைகளைச் சமர்க்களத்தில் உபயோகித்தலே பிரதானமாகக் கொண்ட வீரனுக்கு அத்தொழில் கீழானதாகத் தோன்றும். ராஜ்ய தந்திரிக்கோ தன் உள்ளக் கருத்துக் கைவல்லியமாகும்பொருட்டு நியமிக்கப்பட்டுள்ள அப்படையாளர் கீழ்மக்களாகத் தோன்றுவர். யுத்தவீரர் சொற்படி தொழிலாளி போர்க் கருவிகள் செய்யவேண்டும்; ராஜ்ய தந்திரியின் ஏவலின்படி, அதாவது, எவருடன் எவ்விதங்களில் யுத்தஞ் செய்ய வேண்டு மென்பதை யறிந்து, அவ்வீரர்கள் நடக்கவேண்டும். இவைகளினின்று, கருவிகள் செய்பவனைவிட அவைகளைப் பிரயோகிப்பவன் பெரியவன்;கருவிகளை உபயோகிப்பவனைவிட எவ்வழியில், எதற்காக அவைகள் கையாளப்பட வேண்டுமென்பதை அறிந்து, ஆக்ஞாபிப்பவன் சிறந்தவன் என்ற விஷயங்கள் தெளிவாகின்றன.

கலைகளெனெல்லாம் தலையாயது அரசியல்; இஃதினின்றே நூற்றுக் கணக்கான தொழில்களும், தொழிற்றிறமையும் பெருகிக் குடிகளுக்கு நன்மை உண்டாகின்றது.

ராஜாங்க நிபுணனுக்கு அடுத்தபடி சிறப்புற்று விளங்குபவன் போதகாசிரியன். அரசியல் முறைக்குச் சீரும் சிறப்பும் பெருந்தன்மையும் வாய்க்கப்பெற்ற உத்தியோகத்தினரும், கட்டுக்கடங்கி நடக்கும் பிரஜைகளும் இன்றியமையாதன. இதற்கு வேண்டியது கல்வி. ஆதலால், நல்லரசாட்சி ஸ்தாபித்து அது வளர்வதற்கு எத்தகைய குண நடத்தைகள் தக்கனவென்பதை ராஜநீதி நிபுணனிடமிருந்து அறிந்து, அதற்கேற்றவர்களைத் தயாரித்தல் கலைஞரின் கடமையாகும்.

தன்னிமித்தமே இயற்றத் தூண்டுவதாய், திருப்தியளிக்கக் கூடியதாய், அறிஞரால் தெளிந்து ஒப்பி யநுசரிக்கக்கூடியதாய் விளங்குவதே இன்பம் எனப் பிளாத்தன் காட்டியதை இவர் ஒப்பினர். ஓர் உறுப்புத் தன் தொழிலைச் சரியாக இயற்றும் பொழுது, அல்லது அதன் தொழிலை வேறெவ்வுறுப்பும் செய்யக்கூடாத பொழுது, அதை நல்ல அவயவமென்கிறோம். உதாரணமாக,நேத்திரத்தின் தொழில் பார்த்தல்; இத்தொழிலை வேறெவ்வயவமும் நடத்தாது; ஆதலால், கசடறக் காணும் கண்களைத் தெளிந்த நல்ல கண்களென்று உரைக்கின்றோம். இதேமாதிரி, இடருற்று வருந்தி மடியாது வாழும் ஜீவனே நல்லஜீவனாகும்; அகவழைப்பையும்போக்கையுங் கருத்தையும் உணர்ந்தறிந்து ஒட்டி யொழுகுதலே அறந்தங்கிய, அல்லது புனித, வாழ்க்கையாகும். சுருக்கத்தில், தன் சுய சக்தியைப் பூரணமாக வெளிப்படுத்தலே ஒரு வஸ்துவின் குணநிசயம், அல்லது லக்ஷணமாகும். மானுடனின் விசேஷ குணம் யாது? வேட்கை - கூடல், பசி - தாகம், உறவு - பகைமை முதலானவைகள் கீழ் ஜீவராசிகளிடமும் பொதுவாகக் காணப்படுகின்றன. ஆனால், ஏனைய பிராணிகளிடமில்லாது, பிரத்தியேகமாகக் கிடைக்கப் பெற்ற குணம் மனிதனிடம் எது? பிறவர்று வியற்றுதற் கியலாததாய்த் தன்னாலேயே நிறைவேற்றக் கூடிய, மானுடனுக்கான அபூர்வ கருமம் யாது? நன்மை தீமை, சுகதுக்கம், மேன்மை கீழ்மைகளைப் பற்றி அறிந்து, அவைகளின் தாரதம்மியங்களை உணர்ந்து, கொள்வன கொண்டு விடுப்பன விடுத்து உயர்தற்கான நெறி யேற்படுத்திப் பற்றித்தொடர்ந்து உய்தலான குணமும் செயலுமேயாம்.

அறவாழ்க்கையின் பொருட்டு அறம் விரும்பப்படுவது. இவ்வற வாழ்க்கையே நிலைத்த திருப்தியை நமக்கு அளிப்பது.

நன்மையும் உயர்வும் இருவிதங்களில் தோன்றுவதைக் காண்கிறோம். நன்மையைப் பற்றிய அறிவும், இவ்வறிவை, நெறி தப்பாமல், ஒழுக்கமாக மாற்ற ஆர்வம், அல்லது திடசித்தமு முடைத்தாய் மாற்றலும் அவசியமாவன. அறிந்தும் தீமை புரிவார்களுளர்; நன்மையறிவிருந்தும், ஆசாபாசங்கள் வயப்பட்டுக் கெடுபவருமுளர். ஆதலால், நன்மை யாதென்பதைப் பற்றிய உறுதியறிவு அத்தியாவசியமானாலும், (சுய விசாரிப்பினாலோ, ஆழ்ந்து பார்த்த கல்வியினின்றோ, அல்லது அறவோர் சங்கத்தினாலோ இவ்வறிவு பெறலாம்) இழிய ஆசாபாசங்கள் வீண் பிரேமைகளைக் கட்டுப்படுத்தி, அல்லது அறவே யொழித்து, அல்லது தூயனவாக மாற்றி நற்கருமத்தி லீடுபட் டியற்றலே மிக்க சால்புடைத்து.

நற்பழக்க வழக்கங்கள் இளமை முதற்கொண்டே அப்பியசிக்கப்பட வேண்டும். நம்முடைய இயற்கையமைப்பு, அல்லது சுவபாவம் நல்லது மல்ல, தீதுமல்ல. ஆனால், பயிற்சி பழக்க வழக்கங்களாற்றான் அக்குணங்களை நாம் ஏற்று இருந்து வருகிறோம். நடுநிலை, தன்னடக்கம், தன்னம்பிக்கை, என்பனவாதிகள் பாலப்பருவ முதற்கொண்டே கற்பித்து அப்பியசிக்கப்படுமாயின், அவைகள் நம்முள் ஆழப்பதிந்து நிலைத்து, பின் ஒருக்காலும் நம்மைத் தவறச் செய்யா. தீ நெறிகளிற் புகுத்தா.

நன்மை தீமைகள் யாவை? சரீரத்துள்ளேயே ஆரோக்கியமும் வன்மையு மிருப்பனபோல், ஆன்மாவுள் நன்மை தங்கியுளது. தேகாரோக்கியத்திற்கு வைத்தியன் உதவுதல்போல், ஆன்ம இன்பத்திற்கு ஞானி உதவுகின்றான். ஆரோக்கியத்திற்கான பதார்த்தங்களை யெல்லாம் சரிசமமாகப் பெற்றுள்ள நிலையே ஆரோக்கிய மென்பது. வெப்பமும் தண்மையும், ஈரமும் உலர்ச்சியும், ஒன்றற்கொன்று அதிகரிக்காமல் — குறையாமல், சரிசமமாக நிலைக்கப் பெற்றதே ஆரோக்கிய சரீரம்; இவைகளி லேதேனுமொன்று மேம்படுமாயின், அல்லது கீழுறுமாயின் ஆரோக்கியங் கெடும். இதை ஒத்துளது ஆன்ம இன்பமும். நம்முடைய உணர்ச்சிகள் - பிரேமைகள் - சிந்தனைகளின் ஒத்த உழைப்பினின்று, தக்க பயிற்சியால் திருத்தி யடக்கித் தூய்மைப் படுத்துவதினின்று ஆன்ம இன்பம் உண்டாகித் ததும்பும். நற்பழக்கம், அல்லது செந்நெறி யாதெனில், அபரிமிதத்தாலும் அதிகக் குறைவாலும் வருந்தச் செய்யாத நடுநிலைப் பயிற்சியேயாம். ஆன்றோரால் விதிக்கப்பட்ட, அல்லது அறிஞர்களால் அவ்வப்போது அறிவுறுத்தப் பட்டவைகளினின்று அந்நடுநிலையை (இது பல வழிகளில் தோன்றுவதாதலால்,) ஒருவன் தனக்கான படிக்குத் தேர்ந்தறிந்து பற்றவேண்டும்.

யாவர்க்கும் முதற்கல்வி அத்தியாவசியமானது. இக்கல்வியை யாவரும் பெற்று அநுபவிக்க ராஜாங்கம் உதவவேண்டும். மேலும், படிப்பிக்கும் முறைகளும் விஷயங்களும் ராஜாங்கத்தால் அங்கீகரித்துக் காக்கப்படவேண்டும். தேகப்பயிற்சி, இலக்கிய இலக்கணப் பயிற்சி, சங்கீதம் ஆகிய எழிற்கலைப்பயிற்சிகள் அடங்கப் பெற்றிருத்தலே முதற்கல்வியின் இலக்ஷணமாகும்.

இரண்டு மூன்று வருடகாலம், போர்முறைகளும் கற்பிக்கப்படவேண்டும்.

பிள்ளைகளின் ஏழாம்பிராயத்தில் கல்வி யாரம்பஞ் செய்யப்படவேண்டும்.

மனோ விசாலத்தையும், நெஞ்சுக்கனிவையும், அகத் தூய்மையையும், வாய்மையையும் பெருக்குவதே உயர்தர தாராளக் கல்வி யென்பது.

அவ்வப்போது நம்முட் பெருகி யெழும் பிரேமைகளைக் கழித்து, நன்மை தீமை சுகதுக்கங்களின் குணம் போக்குகளையும், ஏற்றத் தாழ்வுகளையும் தெளிவாகவும் உறுதியுடனும் அறிவித்து உயர்த்துவது எழிற்கலை ஞானம்.

(முற்றிற்று)

T. R. இராஜகோபால்.

தமிழ்ப் பாடம் 41.

நள வெண்பா

(793-வது பக்கத் தொடர்ச்சி)

கலிதொடர் காண்டம்.

புன்கண்கூர் யாமத்துப் பூழிமேற் றான்படுத்துத்
தன்கண் டுயில்வானைத் தான்கண்டும்—என்கண்
பொடியாதா லுள்ளாவி போகாதா னெஞ்சம்
வெடியாதா லென்றான் விழுந்து. 95.

பதப்பிரிவு:—புன்கண் கூர் யாமத்து பூழிமேல் தான் படுத்து தன் கண் துயில்வானைத்தான் கண்டும் என் கண் பொடியாது ஆல் உள் ஆவி போகாது ஆல் நெஞ்சம் வெடியாது ஆல் என்றான் விழுந்து.

பதப்பிரிவு

"புன்கண் - துன்பம்
கூர் - மிகுந்த
யாமத்து - இந்த நடு இராத்திரியில்
பூழிமேல் - புழுதிமேல்
தான் - அவன்
படுத்து - படுத்து
தன் - தன்னுடைய
கண் - கண்கள்
துயில்வானைத்தான் - தூங்குகின்றவனைத்தான்
கண்டும் - பார்த்தும்
என் - என்னுடைய
கண் - கண்கள்
பொடியாது - உதிராதிருக்கின்றன,
உள் - உள்ளிருக்கின்ற
ஆவி - என் உயிர்
போகாது - போகாமல் இருக்கின்றது,
நெஞ்சம் - என்மனம்
வெடியாது - வெடிக்காமல் இருக்கின்றது,
என்று - என்று (தன் வன்மையை நொந்தவனாய்)
விழுந்தான் - நளன் விழுந்தான்.

விரிவுரை:—தன்னால் தமயந்திக்கு வந்த இந்நிலையைக் காணச் சகியாது நளன் தன்னையே பழித்துக் கொள்கின்றான். விதியால் வந்தது இதுவென்று உள்ளந் தேறினாலும் அவ்விதிக்குக் கருவியாய் அமைந்தவன் தானே என்னும் நினைவு புகுந்து இடை இடையே மனதை வருத்தும். துயின்றிருந்த தமயந்தியை நோக்கி நளன் இரங்கியது இது. இனி, இவன் சற்றுக் கண்ணயரத் தமயந்தி துயில்கலைந்து புலம்புவதை அடுத்தசெய்யுள் கூறுகின்றது. ஆல், மூன்றும் அசை.

முன்றிறனின் மேற்படுக்க முன்றா னையுமின்றி
இன்று துயில விறைவனுக்கே—என்றனது
கைபுகுந்த தென்னுடைய கால்புகுந்த தென்றழு
மைபுகுந்த கண்ணீர் வர. [தாள் 96.

பதவுரை.

"இன்று - இந்த இரவில்
முன்றில்தனின்மேல் - இம்மண்டபத்தின் முற்றத்
படுக்க - படுப்பதற்கு [தின்மேல்
இறைவனுக்கு-என் தலைவனாகிய நளனுக்கு(விரிக்க)
முன்தானையும் - (எனது) ஆடையின் தலைப்பும்
இன்றி - இல்லாமல்

துயில - அவன் நித்திரைசெய்ய
என்தனது - என்னுடைய
கை - கை
புகுந்தது - அணையாக அமைந்த இந்த வறுமை,
என்னுடைய - என்னுடைய
கால் - கால்கள்
புகுந்தது - அவனுக்கு மனையாளாய் வந்து புகுந்த
தீமையால் நேர்ந்ததேயாகும்''
என்று - என்று
மை - அஞ்சனம்
புகுத்த - தீட்டிய
கண் - கண்களிலிருந்து
நீர் - நீர்
வர - வரும்படி
அழுதாள் - தமயந்தி அழுதாள்.

விரிவுரை :—துர்பாக்கிய முடையவளாகிய தான் வந்து நளராசனது அரண்மனையில் கால்வைத்த தீமையால் அவனுக்கு இந்தத் துன்பங்களெல்லாம் வந்தனவென்று தமயந்தி தன்னையே நொந்து அழுகின்றாள். உத்தமபத்தினி இவள் ஆதலால், "மதிகெட்டுப்போகவே இம்மாயச் சூதாடி இந்நிலைக்குவந்த பாவியை மணந்தால் எனக்கும் இக்கட்டங்கள் நேரலாயின" என்பது போன்ற வார்த்தை ஒன்று சொன்னதில்லை, மனதிலுமே இப்படிப்பட்ட நினைவு இவளுக்குத் தோன்றியுமிருக்காது.

"என்தனது கைபுகுந்தது என்னுடைய கால் புகுந்தது" என்ற வாக்கியம், "என்னுடைய கால் அந்நாள் இவனது வளமனைக்குள் புகுந்ததால், இன்று புழுதி நிறைந்த இம்மண்டபத்தின் மேல் படுக்க முன்தானை கூட இல்லாமல் என் கையையே அவனுக்குத் தலையணையாய்க் கொடுக்க நேரலாயிற்று" என்னும் கருத்துடையது.

குறிப்பு:—இல்முன், என்றிருக்க வேண்டியது முன் இல் - முன்றில் என்று வருவது வழக்கு. வழக்கு என்பது சொற்கள், பொருள் தந்து நடக்கின்ற முறை. இச்சொல் நடைமுறை அல்லது வழக்கு என்பதை இலக்கணத்தில் இரு பிரிவுகளாகப் பிரித்திருக்கின்றனர். இப்பிரிவுகள் இயல்பு வழக்கு என்றும் தகுதி வழக்கு என்றும் பெயர் பெறும்.

I. ஒரு பொருளைக் குறிப்பதற்கு ஒருசொல் இயற்கையாய் அமைந்திருக்க அச் சொல்லால் அப்பொருளைக் குறிப்பது இயல்பு வழக்காகும். அதாவது, சொற்கள் இயற்கை நெறியில் நடப்பது இயல்பு வழக்கு. அவ்வியற்கைநெறி அல்லது இயல்புவழக்கு என்பது மூன்று வகைப்படும். அவைதாம் இலக்கணமுடையது இலக்கணப்போலி, மரூஉ, என்பனவாம்.

(1) இலக்கணமுடைய இயல்புவழக்கு:— சொற்கள் இலக்கணப்படி வழங்குவதாம். நாய் மரம் புலி நெருப்பு என்பனபோல் சாதாரணமாய் வழங்கிவருகின்ற சொற்களெல்லாம் இலக்கணமுடைய வழக்கைச் சேர்ந்தனவாம்.

(2) இலக்கணப்போலி இயல்பு வழக்கு:—இது இலக்கண மில்லாத வழக்கு. ஆனால் தொன்றுதொட்டு இச்சொல் வழங்கிவருவதை நோக்குங்கால் இலக்கணத்தைத்தழுவியே இருப்பதுபோல் தோன்றும். இலக்கணமில்லாததி இலக்கணம் இருப்பதுபோல் தோன்றுவதால்இது போலி யாயிற்று. போல இருப்பது,போலி. வீட்டின் முன்பாகத்தைக் குறிக்க வரவேண்டிய சொற்கள், இல் முன். ஆனால் இது ஏனோ முன் பின்னாகமாறி முன்றில் என்று தொன்றுதொட்டு வழங்கப் பெறுகின்றது. அப்படியே வஸ்திரத்தின் முன் பாகத்தைத் 'தானைமுன்' (தானை - வஸ்திரம்,) என்பதற்குப் பதிலாக முன்தானை என வழங்குகின்றனர். இவைகள் இலக்கணப் போலிக்கு உதாரணங்கள். இவ்விதம் முன் பின்னாக மாறி வழங்குகின்ற வழக்கு இன்று நேற்று ஏற்பட்டதல்ல. பாஷை பிறந்த காலத்திலேயே உடன் தோன்றியதாக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் அது இயல்புவழக்காய் இலக்கணப்போலி யாகும். இந்த இலக்கணப்போலி வேறு, முன் 311-வது பக்கத்தில் காட்டியிருக்கின்றபடி ஐந்து - அஞ்சு, நாயிறு - ஞாயிறு என்பனபோல் வருகின்ற போலி வேறு. அது எழுத்துப் போலி.

(3) மரூஉ இயல்புவழக்கு :— இலக்கணமுடையது, வாஸ்தவமாக இலக்கணத்தோடு சேர்ந்துவரும் வழக்கு. இலக்கணப்போலி, அநாதியாயிருப்பதால் இலக்கணத்தைச் சார்ந்திருப்பதுபோல் தோன்றும் வழக்கு. மரூஉ, என்பது சொற்கள் இலக்கணம் சிதைந்து வழங்கும் வழக்கு. இலக்கணப் போலியைப்போல் இது தொன்றுதொட்டு வழங்கப்பெறாமல் இடைக்காலத்திலே இலக்கணம் சிதைய வேறுபட மருவி வருதலால் இதற்கு மரூஉ என்று பெயராயிற்று. அருமருந்து அன்ன பிள்ளை, என்பதற்குப் பதிலாய் அருமந்தபிள்ளை என வழங்குகின்றனர். என்தந்தை என்பதற்குப் பதிலாய் எந்தை என வழங்குகின்றனர். இவை மரூஉ வழக்கிற் குதாரணங்கள்.

II. முன்சொன்ன மூன்றுவகை வழக்குக்களும் எப்பொருளைக் குறிக்கவேண்டுமோ அப்பொருளை அச்சொல் இயல்பாய்க் குறிப்பதால் அவை இயல்பு வழக்கெனப் பெயர்பெற்றன. ஆனால் இடமும் சமயமும் நோக்கி ஒரு பொருளை அதற்கு இயற்கையாய் அமைந்த சொல்லால் குறிக்காமல் வேறுவிதமாய்க் குறிக்கவேண்டி நேரிடலாம். அப்படி நேரிட்டபோது அது தகுதி வழக்கு எனப்படும். இந்த விஷயத்தை இப்பொழுது இப்படிக் குறிப்பதுதான் தகுதி என்ற கருத்தால் வழங்குவதால் இதற்குத் தகுதிவழக்கு என்னும் பெயர்வந்தது. தகுதி வழக்கும், இடக்கரடக்கல் மங்கலம் குழூஉக்குறி என மூன்று வகைப்படும்.

(1) இடக்கரடக்கல் தகுதிவழக்கு:—இடக்கர் என்பது பலரெதிர் பேசத்தகாதது. ஆதலால் அடைக்கிச் சொல்வதே தகுதி. 'கால் கழுவி வந்தான்' என்பது போல் சொல்லத் தகாததை மறைத்து வேறு விதமாய்க் கூறுகின்ற வழக்கம் யாவரும் அறிவர்.

(2) மங்கலத் தகுதிவழக்கு :—செத்தான், சுடுகாடு என்பனபோன்ற அமங்கல மானவைகளைச் சொல்லக் கூசித் தூங்கினான் என்றும் நன்காடு என்றும் கூறுவது மங்கல வழக்கு. செவ்வாழ்க் கிழமையை மங்கலவாரம் என்பதும் இவ்வழக்கு.

குழூஉக்குறித் தகுதிவழக்கு:—ஒரு கூட்டத்தார் அல்லது தொழிலாளர் ஒரு விஷயத்தைத் தாமே அறிந்து கொள்ளும்படி இரகசியமாய் மறைத்துப் பேசுவது. தட்டார், பொன்னைப் பறி என்பர். வேடர் கள்ளைச் சொல் விளம்பி என்பர். இவை குழூஉக் குறிகள். சிறைச்சாலையிலிருக்கும் கள்வனை அவன்இனத்தார் 'மாமனார்வீட்டிற்குப் போயிருக்கின்றான்' என்பதும் ஒருவாறு குழூஉக் குறியாகும்.

- வழக்கு
  - இயல்பு வழக்கு
    - இலக்கணமுடையது
    - இலக்கணப்போலி
    - மரூஉ
  - தகுதி வழக்கு
    - இடக்கரடக்கல்
    - மங்கலம்
    - குழூஉக்குறி.

வீமன் றிருமடந்தை விண்ணவரும் பெற்றிலாத்
தாம மெனக்களித்த தையலாள்—யாமத்துப்
பாரே யணையாப் படைக்கண் டுயின்றாண்மற்
றூரே துயரடையா ராங்கு. 97.

பெய்ம்மலர்ப்பூங் கோதைப் பிரியப் பிரியாத [மை
செம்மை யுடைமனத்தான் செங்கோலன்—பொய்ம்
விலக்கினா னெஞ்சத்தை வேறாக்கிநின்று
கலக்கினான் வஞ்சக் கலி. 98.

வஞ்சக் கலிவலியான் மாகத் தராவளைக்கும்
செஞ்சுடரின் வந்த கருஞ்சுடர்போல்—விஞ்ச
மதித்ததேர்த் தானை வயவேந்த னெஞ்சத்
துதித்ததே வேறோ ருணர்வு. 99.

தேவர்களெல்லாரும் இருக்க அவர்களை மதியாது தனக்கே மாலையளித்த வீமராஜனது புத்திரி தமயந்தி தரையில் துயில்வதைக்கண்டு மிக வருந்தியிருந்த நளனது மனதிற் கலி புகுந்து கலக்கவே அவனுக்கு இப்பொழுது ஓர் எண்ணம் உண்டாயிற்று. அவ்வெண்ணம் இன்னதென்பதைப் பின் செய்யுள் கூறுகின்றது.

காரிகைதன் வெந்துயரங் காணாமை னீத்தந்தக்
கூரிருளிற் போவான் குறித்தெழுந்து—நேரே
இருவர்க்கு மோருயிர்போ லெய்தியதோ ராடை
அரிதற் கவனினைந்தா னாங்கு. 100.

பதப்பிரிவு :—காரிகை தன் வெம் துயரம் காணாமல் நீத்து அந்த கூர் இருளில் போவான் குறித்து எழுந்து நேரே இருவர்க்கும் ஓர் உயிர்போல் எய்தியது ஓர் ஆடை அரிதற்கு அவன் நினைந்தான் ஆங்கு.

அன்வயம் :—காரிகைதன் வெம்துயரம் காணாமல் நீத்து அந்த கூர் இருளில் போவான் குறித்து எழுந்து, ஆங்கு அவன், நேரே இருவர்க்கும் ஓர் உயிர்போல் எய்தியது ஓர் ஆடை அரிதற்கு நினைந்தான்.

பதவுரை.

காரிகைதன் - தமயந்தியினுடைய
வெம் - கொடிய
துயரம் - வருத்தத்தை
காணாமல் - பார்க்காதபடி
நீத்து - அவளைவிட்டு
அந்த - அந்த
கூர் - மிகுந்த
இருளில் - இருட்டில்
போவான் - போய்விடுவதற்கு
அவன் - நளன்
எழுந்து - எழுந்து
ஆங்கு - உடனே
நேரே - நேராக
இருவர்க்கும் - தனக்கும் தமயந்திக்கும்
ஓர் - ஒரு
உயிர்போல் - உயிரைப்போல
எய்தியது - அமைந்திருந்ததாகிய
ஓர் - அவ்வொரு
ஆடை - ஆடையை
அரிதற்கு - வெட்டுவதற்கு
நினைந்தான் - எண்ணினான்.

விரிவுரை:—தமயந்தி படுகின்ற துயரத்தைக் காணச் சகியாமல் அவளைவிட்டுப் போய்விடுதலே தக்கதென்று நினைத்தான். கொடிய கானகத்தில் நடு இராத்திரியில் அவளைத் தனியாக விட்டுப்போக இவன் துணிந்ததும் கலி செய்த சூழ்ச்சியே. ஆனால் இவன் இது செய்தது அவள்பால் அன்பு இல்லாததா லல்ல. இச்செய்கை அன்பின் மிகுதியையே காட்டும். காடும் மலையுங் கடந்து தன்னோடு அலையாமல் பிறந்தகம் போயிருக்க நளன் எவ்வளவு சொல்லியும் அவள் கேட்கவில்லை. ஆதலால், இவளைத் தனியே விட்டகன்றால் எப்படியும் தனது தந்தைபாற் போய்ச் சேர்வாள், என்னும் எண்ணத்தால் இவன் இது செய்யத் துணிந்தானேயன்றி வேறன்று.

'காரிகைதன் துயர்காணாமல்' என்பதற்கு இருவித பொருள்கள் பொருந்தும். தன் என்பதைக் காரிகையுடன் சேர்த்துக் கொண்டால், தமயந்தியினுடைய துயரத்தை நளன் காணாதபடி அவளை நீத்தகல நினைத்தான், என்னும் பொருளைப் பெறலாம். இனி, 'காரிகை தன் துயர் காணாமல்' எனத் 'தன்'என்பதைப் பிரித்து விட்டால், 'காரிகையாகிய தமயந்தி தன்னுடைய (நளனுடைய) துயரத்தைக் காணாதபடி அவளை நீத்தகல நினைத்தான்'' என்னும் மறுபொருள் கிடைக்கும். தன்பொருட்டு ஒன்றும் வருந்தாமல் தமயந்தி, நளன் படுகின்ற துயரைக் காணக்காண மேன்மேலும் வருந்துகின்றாளாதலால், நளன் தன்துயரை அவள் காணாதபடி விலகுவதும் அவளுக்குரிய வருத்தத்தைக் குறைப்பதே யாகும். இப்பொருள் கொள்வதால் தமயந்தியின் குணப் பெருமையை அறிந்து நளன் பாராட்டிய நயம் சிறக்கும்.

குறிப்பு:— (1) காரிகை, என்ற சொல்லிற்கு அழகு என்பது அர்த்தம். அழகு என்பது ஒரு குணம், அல்லது பண்பு. அந்தப் பண்பின் பெயராகிய காரிகை என்னுஞ் சொல் இங்கு அந்தப்பண்பைக் குறிக்காமல் அப்பண்பை உடைய ஒரு பெண்ணைக் குறிப்பதால் இங்கு அது பண்பாகு பெயர் (50-வது பக்கம்). மாது தையல் என்னுஞ் சொற்களுக்கும் 'அழகு' என்பதுதான் அர்த்தம். ஆகையால் அவைகளும் பெண்கள் என்னும் பொருளில் வழங்கும்போது பண்பாகு பெயர்களே.

(2) துயரம் காணாமல், ஆடை அரிதற்கு, என்னுமிவ்விரண்டு தொடர்களும் இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்கள்.

(3) போவான், என்பது, முன்வந்த பருகுவான் பெய்வான் என்பனபோல், வினையெச்சம்.

சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

பொருள் ஆராய்ச்சி.

[787-ம் பக்கத் தொடர்ச்சி]

பலரும் பல்வகை யாதல்.

நாகனும் தத்தையும்

வழிபாட்டு நிலையின் வேறுபாட்டை இவ்வாறுவிளக்கு கின்ற சேக்கிழார் வாழ்க்கை நிலையின் வேறுபாட்டையும் நன்றாக விளக்கிவைப்பதற்கு மற்றைய வேடர்களைப் பற்றியும் விரித்துரைக்கின்றார். கண்ணப்பர் பிறந்தகுடி வேட்டுவாது பெருங்குடி. அவர்களது ஒழுக்கம் எத் தகையது? கண்ணப்பரது ஒழுக்கம் எத்தகையது? வேடர்களா? அம்மம்ம. நினைக்கவும் மனம் நடுங்குகிறது. வயிறு குழம்புகிறது.

மைச்செறிந் தனைய மேனி
வன்றொழின் மறவர் தம்பால்
அச்சமு மருளு மென்றும்
அடைவிலா உடைவன் றேலார்
பொச்சையி னறவு மூனின்
புழுக்கலு முணவு கொள்ளும்
நச்சழற் பகழி வேடர்க்
கதிபதி நாக னென்பான்.

உடலைப் பார்த்தாலோ தீமையே ஒருருக் கொண்டாற் போலக் கறுத்திருக்கும். அவர்களது தொழிலை விரித் துரைக்கவும் நா வஞ்சுகின்றமையால் "வன்றொழில்" என்றுதான் சொல்லிவிட்டு விடவேண்டும். எதற்கும் அஞ்சாத நெஞ்சர்கள். அருள் என்ப தவர்களிடம் தளிர்ப் பதில்லை. அதற் கறிகுறியாகத் தாம் கொன்ற விலங்கு களின் தோலை உடையாக அணிந்திருந்தனர். காட்டு விலங்குகளை உண்பது; காட்டுத் தேனைக் குடிப்பது. கன்னெஞ்சும் கள்வெறியும் கொண்ட இவர்கள் கையில் என்ன இருக்கப்போகிறது. நஞ்சைக் கக்கிக்கொண்டே மேற்பாய்ந்து சுட்டெரிக்கும் அம்புதான் இருக்கும். இத் தகைய வேடர்க் கரசனாகிய நாகன் எத்துணை ஆற்ற லுடையவனாய் இருந்திருப்பான். உருட்சிக்கு நீட்சி புளிப்புக்கு அதன் அப்பன், என்றுதான் சொல்லவேண் டும்.

பெற்றியால் தவம்முன் செய்தா
ளாயினும் பிறப்பின் சார்பால்
குற்றமே குணமா வாழ்வான்
கொடுமையே தலைநின் றுள்ளான்
விற்றொழில் விறலின் மிக்கான்
வெஞ்சின மடங்கல் போல்வான்
மற்றவன் குறிச்சி வாழ்க்கை
மனைவியும் தத்தை என்பாள்.

ஆண் சிங்கம்—அதுவும் சினங்கொண்ட சிங்கம்—மடங் கிப்பாயும் தறுவாயிலுள்ள (மடங்கல் என்றமை காண்க) சிங்கம்—போன்றவன் என்று முடித்தார். அவனது மனைவியைப்பற்றிச் சொன்னாரே அவனது மனமாகிலும் இரக்கமுள்ளதோ?

அரும்பெறன் மறவர் தாயத்
தான்றதொல் குடியில் வந்தான்
இரும்புலி எயிற்றுத் தாலி
இடைஇடை மனவு கோத்துப்
பெரும்புற மலையப் பூண்டாள்
பீலியுங் குழையுந் தட்டச்
சுரும்புறு படலை முச்சிச்
சூரிப் பிணவு போல்வாள்.

பெண் சிங்கம் போன்றவள்; அதிலும் அச்சத்தை யூட்டும் பெண் சிங்கம் போன்றவள் என்கின்றார். அத்தகையவர் களுக் கிடையே இவர்களுக்குப் பிள்ளையாகப் பிறந்தார் கண்ணப்பர். அவரும் ஒரு கானவர்க்கரிய சிங்கமே. ஆனால் கடவுளாகி உயர்ந்தார். மைச்செறிந் தனையமேனி வன்தொழில் மறவர்தம்பால், புண்ணியப் பொருளா யுள்ள பொருவில் சீர் உருவார் வந்துதோன்றினார். அரு ளில்லாதவரிடத்தே அன்புருவானவர் பிறந்தார். அது பற்றி யல்லவா சேக்கிழார் "பான்மதி உவரி ஈன்றாலெ னத்" தத்தைவயிற்றிலே திண்ணனார் பிறந்தார், என்கின் றார். ஆனால்சேக்கிழார் அவர்களிடத்தும் அன்பிருப்பதைக் காட்டுகின்றார். புலித்தாலியும் சங்குமணியும் கோத்த மாலைபூண்டு, இலையும் பீலியும் சேர்த்துத் தொடுத்த படலை மாலையைத் தலையில் அணிந்து தனது அகமுடை யானுடன் வீற்றிருந்து குழந்தை விளையாடுவதைக் கண்டு களிக்கின்றாள் தத்தை. புலியின்வாயில் கையை விடுகின்றார் திண்ணனார். ஐயோ என்று நடுநடுங்கி இலைக்கொத்தைக் கொண்டு திண்ணனாரது கையை அப்புறப்படுத்துகின்றான் நாகன். தழைகொண்டு அடிக்க வந்த தந்தையைக்கண்டு அலறி அழுகின்றார் பிள்ளை. அப்பன் அடித்தால் அம்மை அணைக்கின்றாள். வாடா மகனே, என்று வாரியணைத்து முத்தமிட்டு வளர்க்கின் றாள் தாயான தத்தை.

தண்மல ரலங்கற் றாதை தாய்மனங் களிப்ப வந்து
புண்ணியக் கங்கை நீரில் புனிதமாந் திருவாய் நீரில்
உண்ணனைந் தமுத மூறி ஒழுகிய மழலைத் தீஞ்சொல்
வண்ணமென் பவளச் செவ்வாய் குதட்டியே வளரா [நின்றார்.

பொருபுலிப் பார்வைப் பேழ்வாய்
முழையெனப் பொற்கை நீட்டப்
பரிவுடைத் தாதை கண்டு
பைந்தழை கைக்கொண் டோச்ச
இருசுடர்க் குறுகண் டீர்க்கு
மெழில்வளர் கண்ணீர் மல்கி
வருதுளி முத்த மத்தாய்
வாய்முத்தம் கொள்ள மாற்றி.

தாய் நிலையின் தகுதியைக் காட்டிவிட்டுத் தத்தை மறைகின்றாள். இதற்குப் பிறகு அவளைப் பற்றிய பேச் சே இல்லை. அவள் காட்டிய அன்பினைத்தான் திண்ண னார் சிவபெருமானிடத்தே காட்டினார்.

ஆனால் நாகனை அந்த மகிழ்ச்சி நிலையில் நிலைத்திருக்க விடவில்லை சேக்கிழார். பின்னும் மகிழ்கின்றான். பிறகு வருந்துகின்றான். தாயணைத்ததைக் கண்டோம். தந்தை அடிக்க வந்ததைக் கண்டோம். தந்தை யணைத்ததையும் ஒரு முறைக்குப் பன்முறை கூறுகின்றார்.

கருவரை காள மேக மேந்திய தென்னத் தாதை
பொருவரைத் தோள்க ளாரப் புதல்வனை எடுத்துக் [கொண்டான்

என்று பிறந்ததும் எடுத்தணைத்ததை முன்னரே சொல்கின்றார். விற்றொழில் கற்கும் அவ்வளவு பெரிய ராகத் திண்ணனார் ஆனபொழுது அணைத்ததை,

தந்தையு மைந்த னாரை
நோக்கித்தன் தடித்த தோளால்
சிந்தையுண் மகிழப் புல்லிச்
சிலைத்தொழில் பயிற்ற வேண்டி
முந்தையத் துறையின் மிக்க
முதியரை அழைத்துக் கூட்டி
வந்தநாட் குறித்த தெல்லா
மறவர்க்குச் சொல்லி விட்டான்.

என்று கூறுகின்றார். உள்ளங் களிப்ப அணைத்து அத் திண்ணனாரின் முன்னேற்றத்தில் கண்ணும் கருத்து மாக இருந்ததைக் குறிக்கின்றார்.

நாகனுடைய வாழ்க்கையின் மாலைக் காலத்தைத் தான் விரித்துரைக்கின்றார். இளமையில் அவனிருந்த நிலையைச் சுட்டிக் காட்டி விட்டுவிடுகின்றார். மாலைக் காலத்தே மைந்தன் மேலேயே உயிராய், பிள்ளை பெறு வதற்குக் கோயில் குளமெல்லாம் சுற்றிவந்து மயிலும் கோழியும் சுற்றிவிட்டுக் கடவுளர்க்குப் பெருஞ் சிறப் புச் செய்தான். பின்னரும் பிள்ளை மேலேயே எண்ண மாய் அவர் வாழவேண்டித் திருவிழாச் செய்வதும் விருந்து வைப்பதுமாக வாழ்ந்து வந்தான் என்று நம்மை அவன் வீட்டிற்குள் அழைத்துக் கொண்டுபோய்க் காட்டு கின்றார். ஆனால் வெளியில் எவ்வாறிருக்கின்ற தென் பதை மேல் விரித்துரைக்கத் தொடங்குகின்றார். கிழவ னாய் விட்டான். தள்ளாதவனாய் விட்டான். வேட்டை யாட உடம்பில் வலிவில்லாதவனாய் விட்டான். விலங்கு கள் புனத்தை யழிப்பதைத் தடுக்க வகையில்லாது போயிற்று. வேடர்கள் எத்துணை நாள் பொறுத்திருப் பார்கள். எல்லோரும் ஒன்று கூடி அவனிடம் வந்து முறையிட்டார்கள். அந்த நிலையிலே அவன்மனம் எவ்வா றாகி இருக்கும்? அதை எல்லாம்விரித்துரையார் சேக் கிழார். அழுங்கதை எழுதுவது அவர் நோக்கம் அல்ல. மனதை ஒருவாறு தேற்றிக்கொண்டான் நாகன்.

தன் மகனைக் கைகாட்டி விட்டான். நாகனது வாழ்நாளில் மாலைப்போதினையும் தனது அருமந்தன்ன மைந்தன் மேல் அவனுக்கிருந்த ஆராக் காதலினையும் அழகாகப் புனைந்துரைக்கின்றார் நம் புலவர்பெருமானார்.

இவ்வண்ணம் திண்ணனார் நிரம்பு நாளில்
இருங்குறவர் பெருங்குறிச்சிக் கிறைவ னாய
மைவண்ண வரைநெடுந்தோள் நாகன் தானும்
மலையெங்கும் வனமெங்கும் வரம்பில் காலம்
கைவண்ணச் சிலைவேட்டை ஆடித் தெவ்வர்
கணநிரைகள் பலகவர்ந்து கானம் காத்து
மெய்வண்ணந் தளர்மூப்பின் பருவம் எய்தி
வில்லுழவின் பெருமுயற்சி மெலிவான் ஆனான்,

சொன்னவுரை கேட்டலுமே நாகன் தானும்
சூழ்ந்தவருந் தன்மூப்பின் தொடர்வு நோக்கி
முன்னவர்கட் குரைசெய்வான் மூப்பி னாலே
முன்புபோல் வேட்டையினில் முயல கில்லேன்
என்மகனை உங்களுக்கு நாத னாக
எல்லீரும் கைக்கொண்மின் என்ற போதில்
அன்னவரும் இரங்கிப்பின் மகிழ்ந்து தங்கோன்
அடிவணங்கி இம்மாற்றம் அறைகின் றார்கள்.

முதன் முதலே மூப்பினை எண்ணி இளிவரற்சுவை யொடு ஏங்கி நிற்கவேண்டிய இவ்விடத்தும் தந்தையார் தனது மைந்தனிடத்து வைத்த மாறாப் பேரன்பினையே சீராகச் சிறப்பித்துச் சொல்கின்றார் சேக்கிழார். அது தானே அவர் வேண்டுவது. எது எடுத்தாலும் தக் கோர்க்குத் தக்கன கொடுத்துத் தன் தொழிலின் தலை நின்ற வானவர்க்குச் சிறப் பெடுத்தலே நாகன் நாளும் செய்யும் நற்றொழிலாயது. அவ்வாறாயின் காதற்பிள்ளை கன்னி வேட்டையாடக் காடுபுகும் பொழுது காட்டிலே உறைகின்ற இறைவர்க்கு இனிய பலி எடுத்தூட்ட வேண்டாமா? கடவுட்பொறையாட்டியைக் கண்ட ழைக்க வேண்டாமா? அவனது கருத்திசைந்த பொருள் களை விருப்புடன் தந்துதவ வேண்டாமா?

சிலைமறவர் உரைசெய்ய நாகன் தானும்
திண்ணனைமுன் கொண்டுவரச் செப்பி விட்டு
மலைமருவு நெடுங்கானின் கன்னி வேட்டை
மகன்போகக் காடுபலி மகிழ வூட்டத்
தலைமரபின் வழிவந்த தேவ ராட்டி
தனைஅழைமின் என அங்குச் சார்ந்தோர் சென்று
நிலைமையவள் தனக்குரைப்ப நரைமூ தாட்டி
நெடிதுவந்து விருப்பினோங் கடிது வந்தாள்.

கோட்டமிலென் குலமைந்தன் திண்ணன் எங்கள்
குலத்தலைமை யான்கொடுப்பக் கொண்டு பூண்டு
பூட்டுறுவெஞ் சிலைவேடர் தம்மைக் காக்கும்
பொருப்புரிமை புகுகின்றான் அவனுக் கென்றும்
வேட்டைவினை எனக்குமே லாக வாய்த்து
வேறுபுலம் கவர்வென்றி மேவு மாறு
காட்டிலுறை தெய்வங்கள் விரும்பி உண்ணக்
காடுபலி யூட்டென்றான் கவலை இல்லான்.

மகனை வரவழைத்தான். மற்றொரு முறை அணைத்துக் கொண்டான். அவருக்குத் தன் நிலையை விளக்கினான். அரசனாக்கினான்.

தெய்வநிகழ் குறமுதியாள் சென்ற பின்பு
திண்ணனார் சிலைத்தாதை அழைப்பச் சீர்கொள்
மைவிரவு நறுங்குஞ்சி வாசக் கண்ணி
மணிநீல மலையொன்று வந்த தென்னக்
கைவிரவு சிலைவேடர் போற்ற வந்து
காதல்புரி தாதைகழல் வணங்கும் போதில்
செய்வரைபோல் புயமிரண்டும் செறியப் புல்லிச் [தான்.
செழும்புலித்தோல் இருக்கையின்முன் சேரவைத்

முன்னிருந்த மைந்தன்முகம் நோக்கி நாகன்
மூப்பெனைவந் தடைதலினால் முன்பு போல
என்னுடைய முயற்சியினால் வேட்டை யாட
இனிஎனக்குக் கருத்தில்லை எனக்கு மேலாய்
மன்னுசிலை மலையர்குலக் காவல் பூண்டு
மாறெறிந்து மாவேட்டை ஆடி என்றும்
உன்னுடைய மரபுரிமை தாங்கு வாய்என்று [அன்றே.
உடைதோலும் சுரிகையும்கைக் கொடுத்தான்

எல்லோரும் இரக்கம்கொள்ளும் நிலையில் நாகன் இருந்த தைச் சிறிது சுட்டிக் காட்டுகின்றார்.

தந்தைநிலை உட்கொண்டு தளர்வு கொண்டு
தங்கள்குலத் தலைமைக்குச் சாய்வு தோன்ற
வந்தகுறை பாடதனை நிரப்பு மாறு
மனங்கொண்ட குறிப்பினான் மறுமை கொண்டு
முந்தையவன் கழல்வணங்கி முறைமை தந்த
முதற்சுரிகை யுடைதோலும் வாங்கிக் கொண்டு
சிந்தைபரம் கொளநின்ற திண்ண னார்க்குத்
திருத்தாதை முகமலர்ந்து செப்புகின்றான்.
பின்னர் நாகன் வாழ்த்தி வேட்டைக் கனுப்பினான்.

நம்முடைய குலமறவர் சுற்றத் தாரை
நான்கொண்டு புரித்ததன்மேல் நலமே செய்து
தெம்முனையில் அயற்புலங்கள் கவர்ந்து கொண்ட
திண்சிலையின் வளமொழியாச் சிறப்பின் வாழ்வாய்
வெம்முனையின் வேட்டைகளும் உனக்கு வாய்க்கும்
விரைந்துநீ தாழாதே வேட்டை ஆட
இம்முாண்வெம் சிலைவேடர் தங்க ளோடும் [நின்றான்.
எழுகஎன விடைகொடுத்தான் இயல்பின்

திண்ணனார் வேட்டையாடினார். பன்றியின் பின் ஓடினார். காளத்தி மலையைக் கண்டார். கடவுள் மேல் காதல் கொண்டார். தன்னை மறந்தார். உலகை மறந் தார். முனி பிடித்துக் கொண்டதென எல்லாரும் எண்ணினார்கள். உடன் சென்றவர்கள் நாகனிடம் வந்து நடந்ததைச் சொன்னார்கள். நாகனது மனம் எவ்வா றிருக்கும்? உண்ணுவானோ? உறங்குவானோ? அவனது அழி நிலையை உரைப்பதற்கு அதுவல்ல இடமாதலின் "ஊணுமுறக்கமின்றி" என்ற சில சொற்களிலேயே அவனது நிலையைச் சுட்டிக்காட்டுகின்றார் சேக்கிழார். பேயோட்ட வந்த பெரியாளும் ஒன்றும் முடியாமற் போய்விட்டாள். "கை விட்டார்" என்ற அருஞ் சொல் லால் அவர்களது மன நிலை அடங்கலையும் அழகாகக் குறிப்பால் உணர்த்துகின்றார் சேக்கிழார்.

T. P. மீனாக்ஷிசுந்தரன்.

கம்ப ராமாயணம்.

பாலகாண்டம்

8. வேள்விப் படலம்.

(783-ம் பக்கத் தொடர்ச்சி.)

இராமனின் சீரிய சடையன் சொற்களே.

வாரண மாலைசூடி நிலக்கிரிகள் தொடரவந்த தாடகையை உருவ எய்த சிலையுடை இவ்விராமன், மார்ஸ்டன் துரையவர்கள் எழுதிய இந்துதேச சரித்திரப் புத்தகத்தைப் புனைந்துநிற்கும் சித்திரப்படத்திற்காணும் இராமனே அல்லன். அங்கு, "விச்வாமித்திரன் இராம இலக்குமணர்களுக்கு வில்வித்தை கற்றுக்கொடுத்தல்" என்னும் அடிவரி விளக்கத்தோடு அமைந்திருக்கின்ற படத்தில், அப்பொழுதுதான் இராமனுக்குக் கோசிகன் முதல்முதல் வில்லையே கையிற்பிடிக்கக் கற்பித்துக் குறியெடுக்கும் விதத்தைக் காண்பிப்பதைப்போல் தோன்றுகின்றது. உண்மையில் அடித்தநாள் இராமன் மந்தரையின் கூனினைநிமிர்த்த முயன்றதோடுமுடிந்து, இக்காலம் இவன் போர்க்குரிய படையெலாம் பயின்று அவைகளை ஆள்வதற்கொத்த தோள்வலியும் பெற்றனன். அவன் வில்லின் கலையையும் மெய்யின் மொய்ம்பையும் தாடகையின் திறத்தில் சோதித் தளந்தபின்னர்க் கோசிகன், இனி இவனுக்கு மந்திர அத்திரங்கள் அளிப்பதன் தகுதி நோக்கி அவைகளை உபதேசம் செய்தலோடும் வேள்விப்படலம் ஆரம்பமாகின்றது. முன் அம்பிற்குச் சொல் நிகராய சூழ்ச்சியைக் கம்பர் மறந்திலர். அத்திரங்களை இராமனுக்குக் கோசிகன் கொடுத்தபரிசு இன்னபடி இருந்ததெனக் கூறுகின்ற கம்பர்,

> மண்ணவர் வறுமை நோய்க்கு
> மருந்தன சடையன் வெண்ணெய்
> அண்ணறன் சொல்லே யன்ன
> படைக்கல மருளி னானே.

[பூலோகத்தி லுள்ளவர்களது வறுமை என்னும் நோய்க்கு மருந்துபோன்ற வெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலினது சொல்லுக்கு நிகரான அத்திரங்களைக் கோசிகன் கொடுத்தான்.]

என்று மகிழ்ந்து பாடுவார். தாடகையைத் துளைத்தோன்றன் கைவாளி அவன் வாய்வரு சொற்களை ஒக்குமெனின் இங்குக் கோசிகன் அளித்த படைகள் வெண்ணெய்வாழ் அண்ணல் தன் சொல்லிற்கு நிகராயது, 'மண்ணவர் வறுமை நோய்க்கு மருந்து' எனும் அடைமொழிகள் சடையனுக்கு உரியன. அவை, 'சொல்லை' அடுத்து நிற்பனவல்ல. ஆதலின், அவன் சொல்லிற்குப் படைக்கலங்கள் பிழைக்காத தன்மையில் பொருத்தமெய்தி விளங்குகின்றன. படைக்கலத்திற்கு உவமை சொல் ஆகக்கூடியது உய்த்தநெறி தவறாமற் செல்கின்ற வாய்மையிற்றான். எனின், சடையப்பவள்ளல் வழங்கும் சொற்கள்போன்ற வாய்மையுடைய அத்திரங்கள் இராமன் கோசிகன்பால் பெற்றான் என்பதே அமையும். அவ்வாறன்றி, "வெண்ணெய் அண்ணல் சடையன் தன், மண்ணவர் வறுமை நோய்க்கு மருந்தன சொல்லேயன்ன படைக்கல மருளினனே" என மாற்றி இடுக்கண் களையும்பெற்றியில் சடையன் சொல்லிற்கும் இராமன்பெற்ற படைகளுக்கும் ஒற்றுமையூட்டுவதும் பொருந்தலா மெனினும் இதனில், இரண்டொரு நயங்கள் எஞ்சிவிடுகின்றன.

சடையப்ப வள்ளல்பால் அலகிலா நன்றி பெருகுமுள்ளத்தவர் கம்பர். இராமகதையிலே அவனைக் கலந்து பாடி எழேழ் உலகமும் காப்பியத்தலைவன் பேரும் தன்னுடைய தனிப்பெரும் நூலும் வாழுநாள் அளவு சடையப்பவள்ளல்தன் புகழும் பேரும் நிலைநின்று வாழும்படி கம்பர் வைத்தாரென்றால், இவ்வகை அரிய நன்றி இக்கவிக்கரசு பாராட்ட அன்னவன் செய்த உதவிதான் யாதெனச் சிந்திக்கவேண்டா. அது எனைத்துணையதாயினும் பனைத்துணையாமெனக் கொள்ளும் பெருந்தகைக் குணத்தால் மிக்க மேன்மையர் ஆதலாலே கம்பர், காக்கின்ற தந்தையின்றித் தமியனாய்ச்சென்ற தனக்குச் சோறும் சிறுபடிப்பும் தந்தளித்த உதவிக்கு ஈடாக இவ்வரு நலத்தினை உவந்து நல்கினார். வெண்ணெய்வாழ் வள்ளலுக்குக் கம்பர் அளித்த இச்செல்வத்தை உன்னுவார் யாரோ அவ்வியங்கொள்ளார். ஆயினும், அவ்வள்ளலின் முயற்சியாலேயே குலோத்துங்க சோழன் கம்பரை இராமாயணம் பாடுவித்தான் என்னும் வரலாறு உண்மையெனில், அக்கம்பரும் பிற்படச் சடையனைப் புகழ்தற்கு அவாப் பெறுதாரும் இரார். இயலாக் குறையே யன்றி வேண்டாக்குறையால் விலகிநிற்றல் யாவர்க்கும் அருமை. கம்பர் காலத்துப் புகழேந்தியும் அவருக்குப் பின்வந்த வில்லிபுத்தூராரும் தம்முடைய உபகாரிகளைத் தத்தம் நூலிலே அமைத்துப்பாடி, புலவரால் புரியவல்ல கைம்மாறு அவர்களுக்குச் செலுத்தி யிருக்கின்றனர். ஆயினும் சந்திரன் சுவர்க்கியும் கொங்கர் கோமானும், கம்பர்பால் சடையன் தன் நல்வினைப் பயனாற் பெற்ற செல்வங்களில் ஒவ்வொன்றே பெற்றவராகின்றனர்.

எவ்வாறெனில், எழுலகும் நின்ற கவிகை நிழல் வேந்தன் நளமகாராஜன் அரசுவீற்றிருந்த மாவிந்த நகரின் செல்வத்திற்கு எல்லையாய் அதனை, சந்திரன்சுவர்க்கியின் நகராய "முரணைநகர்தான்" என்று சாற்றி அவன் செல்வச் சிறப்பை வியந்தார், புகழேந்தி. இது வீறுகோளக் கூறியயேதன்றி உண்மை என்று எவரும் நம்பார். மாவிந்தத்திற்கு நிகர் ஒரு சிறு மன்னன் ஊர் ஆமோ. ஆதலால் தன் வள்ளலைப் புகழப் புகுந்த இப்புலவர் இல்லாததைச் சொல்லி வலிந்து புகழக் காண்கின்றோம். ஒருவனிடத்தில் ஒரு பொருளேனும் குணமேனும் கூறுமளவு இல்லை என்பது வெளிப்படையாயிருக்க மிகைபட உயர்த்திப் பேசுதல் புகழெனத் தோன்றுமுன் ஒரு சிறிது நிந்தையாகக் காணும். அல்லாது, இச்சகம்பாடுவதின் இலக்கணம் இதுவே.

இதன்பின், பாழ்மண்டபத்தில் தமயந்தியை நீத்தகன்ற நளனது செய்தியைத் "தாருவெனப் பார்மேல் தரு சந்திரன்சுவர்க்கி மேருவரைத் தோளான் வீரவார் போல்" நளன் போயினன், என்னும் முகத்தால் தன் வள்ளுவநாட்டு வள்ளல்தன் வீரத்தைப் புகழேந்தி பாராட்டுவதாக நினைத்துப் பாடுகின்றார். நளன் அகல்வதற்கும் சந்திரன்சுவர்க்கிக்குப் போர் தோற்ற பகைவர் இடைந்து ஓடுதற்கும் எதும் உவமையே யில்லை. எவ்வாறாயினும் அவனது மாற்றாரை அழிக்கும் ஆற்றலைக் கூற வேண்டுமே என்னுமோர் பொதுப்பால் புகழேந்தி இது செப்பினாரே யொழியத் தொழிலால் உவமையும் பொருந்தல் வேண்டுமெனக் கருதினர் என்று எண்ணுதல் அருமை. செல்வமும் வீரமும் இவ்வாறு மிகைபட்டும் இடம்விட்டும் பாடப் பெற்றாலும் சந்திரன்சுவர்க்கிக்கு உரிய கொடையையும் தமிழபிமானத்தால் பெருகிய அவன் புகழையுங் குறிக்குமிடங்களிற் புகழேந்தியும் தனக்குரிய அழகோடு விளக்குகின்றார். "சந்திரன் சுவர்க்கி நாமத்தால் பாவேய்ந்த செந்தமிழ்" போலத் தமயந்தியின் சுயம்வரச்செய்தி அரசர்க்கிடையே பரவியதென்பதும், "சங்க நிதிபோல் தரு சந்திரன்சுவர்க்கி வெம்கலி வாய்நின்று உலகம் மீட்டால்போல்" பாம்பின் வாயிலிருந்து தமயந்தியை வேடன் பறித்தான் என்பதும், "வண்டார் வளவயல்சூழ் வள்ளுவ நாட்டெங்கோமான் தண்தார் புனை சந்திரன்சுவர்க்கி கொண்டாடும் பாவலன்பால் நின்ற பசிபோலக் காவலன்பால் நின்ற கலியும் நீங்கிற்று" என்று கலி நளனைவிட்டு நீங்கியதை எடுத்துக்காட்டுவதும், மிக்க அழகுடன் நயம்பெற்று விளங்குவது, அவனுக்கு உண்மையாயிருக்கின்ற வண்மையைப் பேசுகின்றாராதலால் அது இயற்கையாய் வாய்ந்ததென்னுங் காரணத்தினாலாகும். ஆதலின் புகழேந்திப்புலவர் தன் உபகாரியைப் புகழ்வதில் அவன் ஈகையால் பிறர் இடுக்கண் களைகின்ற அருளும், கலையின துணர்வால் பாவலரைக் கொண்டாடும் குணமுமே தலைசிறந்து விளங்குகின்றன.

பாரதநூலின் ஆசிரியர் வில்லிபுத்தூராரும் இவ்விரு தன்மைகளையே தன்னை ஆதரித்த அரசன்பாலும் கொண்டாடுதற் கொத்தனவாய்க் கண்டனர். கன்னன்றன் கொடையின் பெருமையை,

> கோவல்சூழ் பெண்ணை நாடன்
> கொங்கர்கோன் பகைஞர் வேந்தன்
> பாவலர் மானங் காத்தான்
> பங்கயச் செங்கை யென்ன
> மேவல ரமரென் னுமல்
> வெங்களந் தன்னில் நின்ற
> காவலன் கன்னன் கையும்
> பொழிந்தது கனக மாரி

என்றும்; வெற்றியொடு மீள்கின்ற உதிட்டிரன் சேனையின் நெஞ்சக்களிப்பை,

> நாகையாப் புகழான் பெண்ணை
> நதிவளஞ் சுரக்கு நாடன்
> வாகையாற் பொலிதிண் தோளான்
> மாகதக் கொங்கர் கோமான்
> பாகையாட் கொண்டான் செங்கைப்
> பரிசுபெற் றவர்நெஞ் சென்ன
> ஓசையாற் செருக்கி மீண்டார்
> உதிட்டிரன் சேனை யுள்ளார்.

என்றும் புகழும் செய்யுள்களில் பாவலர் மானங்காத்துப் பரிசிலளிப்பதும், வேண்டினர் வேண்டாதவொன்றுது பொருள் வழங்குவதும் கொங்கர்கோமானைச் சார்ந்து நிகழ்விக்கின்றன. இச்செய்யுள்களில் வில்லிபுத்தூரர், தன் உபகாரியின் நாட்டுவளம் புகழ் வெற்றி போன்ற மற்றவைகளையும் செப்புகின்றார் என்பது உண்மையே. அவ்வாறே புகழேந்தியும்,

> மாமனுநூல் வாழ வருசந் திரன்சுவர்க்கி
> தாமரையாள் வைகுந் தடந்தோளான்—காமருபூந்
> தாரான் முரணைநகர் தானென்று சாற்றலாம்
> பாராளும் வேந்தன் பதி.

> மாமுத்த வெண்குடையான் மால்களிற்றான் வண்
> தாமத் தரிச்சந் திரன்சுவர்க்கி—நாமத்தாற்
> பாவேய்ந்த செந்தமிழா மென்னப் பரந்ததே
> கோவேந்தர் செல்வக் குழாம்.

> தாருவெனப் பார்மேற் றருசந் திரன்சுவர்க்கி
> மேருவரைத் தோளான் வீரவார்போற்-கூரிருளிற்
> செங்கா னகஞ்சிதையத் தேவியைவிட் டேகினான்
> வெங்கா னகந்தனிலே வேந்து.

> சங்க நிதிபோற் றருசந் திரன்சுவர்க்கி [யை வெம்
> வெங்கலிவாய் நின்றுலக மீட்டாற்போன்—மங்கை
> பாம்பின்வாய் நின்று பறித்தான் பகைகடிந்த
> காம்பின்வாய் வில்வேடன் கண்டு.

> வண்டார் வளவயல்சூழ் மள்ளுவநாட்டெங் கோமா
> தண்டார் புனைசந் திரன்சுவர்க்கி-கொண்டாடும்[ன்
> பாவலன்பா னின்ற பசிபோல நீங்கிற்றே
> காவலன்பா னின்ற கலி.

என முன்னிங்குக் குறித்துள்ள வெண்பாக்களில், சந்திரன்சுவர்க்கியின் தன்மைகளில் வேறுஞ் சில வைத்துள்ளார். எனினும் எதனை இப்புலவர்கள் உவமிக்க முயன்றிருக்கின்றனரோ அதனைக்கொண்டே அவர் கருத்தை மதித்தல்முறை. சந்தர்ப்பத்திற்கு இன்றியமையாதன யாவும் மிகை. அவைகளை ஆங்கிலத்தில் Obiter Dicta என்பர். அன்னவைகளுக்குச் செய்யுளில் அமைந்த கருத்தை ஆளும் அதிகாரம் இல்லை.

புகழேந்தியிலும் வில்லிபுத்தூராரிலும் கவிகள் தம்மை ஆதரித்த அரசரைப் பாராட்டும் பரிசு காணலாயிற்று. இதனோடு கவிக்கரசு ஒருவர் வேளாளர் குடிப்பிறந்த ஒரு செல்வனை, அவன் தம்பியர் எனக் கருதப்படும் கண்ணன் சரராமன் என்னும் இருவரோடும், கொண்டாடும் வண்ணமும்ஒப்புநோக்குங்கால் கோசிகன் இராமனுக்களித்த படைக்கலங்கள் வெண்ணெய் அண்ணலின் சொல்லிற்கு நிகராய நுண்மையும் நயமும் நன்குவிளங்கும்.

திங்கள் உதிக்க இருள்நீங்கி நிலவின் பெருக்கு எங்கும் பரந்ததற்குக் கம்பர்,

> வண்ண மாலை கைபரப்பி
> உலகை வளைந்த விருளெல்லாம்
> உண்ண வெண்ணித் தண்மதியத்
> துதயத் தெழுந்த நிலாக்கற்றை
> விண்ணு மண்ணுந் திசையனைத்தும்
> விழுங்கிக் கொண்ட விரிநன்னீர்ப்
> பண்ணை வெண்ணெய்ச் சடையன்றன்
> புகழ்போ லெங்கும் பரந்துளவால்.

[கருநிறமமைந்த மாலைப்பொழு தென்னும் கைகளைப் பரப்பி உலகத்தை வளைத்துக்கொண்ட இருளை எல்லாம் உண்டுவிட நினைத்துக் குளிர்ந்த சந்திரனது உதயத்தில் தோன்றிய கிரணங்கள், ஆகாயத்தையும் பூமியையும் எல்லாத் திசைகளையும் தன்னுள் அடக்கிக்கொண்ட, விரிந்த நல்ல நீர்உடைய பண்ணைகள் வாய்ந்த வெண்ணெய் நல்லூரில் வாழும் சடையன்தன் புகழ்போல் எங்கும் பரவின.]

என்று வகுக்கும் உவமையால் சடையனுடைய புகழின் விரிவு விளங்கலாகின்றது. இதனில் சந்தர்ப்பத்திற்கின்றியமையாத அவன் புகழ்தவிர வேறொன்றும் கூறப்படவில்லை. வெண்ணெயின் வளப்பம் செப்பியது அவனைச் சார்ந்ததாகாது.

சேதுபந்தனப் படலத்தில், குரங்குகள் விட்டெறிந்த மலைகளை நளன் வழுவவிடாது தாங்கினதை

மஞ்சினிற் றிகழ்தரு மலையை மாக்குரங்
கெஞ்சுறக் கடிதெடுத் தெறிய வேகளன்
விஞ்சையிற் றாங்கினன் சடையன் வெண்ணெயில்
தஞ்சமென் றோர்களைத் தாங்குந் தன்மைபோல்

[மேகத்தை அளாவி விளங்குகின்ற மலையைப் பெரிய குரங்குகள் வேகமாக ஒன்றன்பின்னொன்றாய் எடுத்து எறியவே, நளன் மந்திரத்தால் எந்தியதையொக்க நழுவவிடாமல், சடையப்பவள்ளல் வெண்ணெய் நல்லூரிற்குத் தன்னைத் தேடிவந்து சரண் புகுந்தவர்களைத் தாங்குவதேபோல் அம்மலைகளைத் தாங்கினன்]

என்றதால் அவனது அருள் அரியதோர் வகையில் பாராட்டப் பெறுகின்றது. இங்கும் சடையனுக்குத் தொழிலால் உவமைநலம் எய்தியதேயன்றி அவனைச் சிறப்பிக்க அடைமொழிகள் வேண்டாவழி வந்தில.

புகழும் அருளும் இவையாகச் சடையனால் விளங்கப் பெற்ற வேளாளர்குடிப் பெருமையும் எவராலும் எண்ணுதற்கரிய இவன்குலத்தின் சிறப்பும் அக்குலத்தை இவன் விளக்கவந்த அழகுந்தோன்றக் கம்பர் ஸ்ரீ இராமனுக்கு மகுடஞ் சூட்டுகின்ற வைபவத்தை,

அரியணை யனுமன் தாங்க
அங்கத னுடைவா ளேந்தப்
பரதன்வெண் குடைக விக்க
இருவருங் கவரி வீச
விரைசெறி குழலி யோங்க
வெண்ணெயூர்ச் சடையன் றங்கள்
மரபுளோர் கொடுக்க வாங்கி
வசிட்டனே புனைந்தான் மௌலி.

[சிம்மாதனத்தை அநுமன் தாங்கி யிருக்கவும், அங்கதன் உடைவாள் ஏந்தி இருக்கவும், பரதன் வெண்குடை பிடித்திருக்கவும், இலக்குமணனும் சத்ருக்கனும் சாமரை வீசவும், வாசனைகமழும் கூந்தலையுடைய சீதாபிராட்டி உவகையோடு அருகிருக்கவும், திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலின் வம்சத்தைச் சேர்ந்த முன்னோர்கள் கிரீடத்தை எடுத்துத் தம் அநுமதியோடு கொடுக்க அதனை வசிட்டன் வாங்கி இராமனுக்குச் சூட்டினன்.]

என்றால் இச்சடையனுக்கு நிகர் இவ்வீரேழுலகினில் எவர் உளர். கம்பர் அவனுக்கு அளித்த பதவியின் உயரம் எக்கடவுள் யாருக்கு நல்க வல்லார்?

இன்னபடி ஈடும் எடுப்பும் இயலாததோர் வகையில் தன் வள்ளலைக் கம்பர் புகழ்வாரானபோது அவனைப் பற்றி அவர் கூறுவதெதுவும் உலகமலைவு என்னல் ஆகாது. "இனி நீ இராமனுக்கு முடி சூட்டலாம்" என வசிட்டனுக்கு அநுமதி கொடுத்தற்கொத்த பெருமைவாய்ந்த சடையன் தங்கள் தொல்குல முன்னையோர் பெற்றுள உயர்வினை உரைத்துத் தம் காப்பியத்தை முடிவிற்குக் கொண்டுவருகின்ற கம்பர் முதலிலேயே இராமன் சொல்லினும் சிறந்தன சடையன் சொற்களெனத் தெருட்டுதற்கோ கோசிகன் கொடுத்த படை, "வெண்ணெய் அண்ணல்தன் சொல்லே அன்ன" ஆயின. இராமன் தாடகையின்மீது தொடுத்த பாணத்தை அவனுடைய சொற்களுக்கே நிகராக்கிப் பின் முனிவன்பால் பெற்ற படைகளைச் சடையன் சொல்லிற்கு நிகரென்று வேறு படுத்தியதால் அவ்வம்பினும் இப்படை விஞ்சுவதுபோன்றே அவன் சொல்லினும் இவன்சொல் வாய்மையால் விஞ்சியதெனும் நோக்கம் உள்ளுறைந்து கிடப்பதென உணரலாகின்ற தெனினும் அமையும். தாடகையெனுந் தையலாளைக் கொல்வதால் நலம்பல பெருகுவதற் குளதெனினும் அக்கன்னிப் போரில் பழிசிறி துளதென இராமன் கூசியும் கூனி ஏசியும் வான்மீகத்தின்படி கோசிகன் பேசியும் உளர். ஆதலின், அந்தப் பழி, தன்முனைக் காட்டித்தந்த சுக்கிரீவனை வெறுத்துரைத்த இலக்குமணனைப் 'பரதனே பெரிதுத்தமன்' என்று முன்னத்தால் இடித்தழுத்திய சொல்லையும், காதலோடு நண்ணிய கற்பிற்கரசியைக் கீடமெனச் சுட்டுரைத்த சொல்லையும் தனக் குவமையாய்க் கொண்டது இயற்கையாயிற்று. கோசிகன் இன்று அருளியது தூயவாம் விஞ்சைகளுக்கோ இராமனது சொற்கள் இணையே யாகா. எனின், ஆற்றலோடு வாய்மையோடு வேண்டாக்காலையில் ஒரோவழித் துன்பமும் விளைத்திடாப் பண்புடைய சொல்லொன்று நாடி இத் தெய்வப்படைகளுக்கு உவமை அமைக்கவரும் கம்பர் அம்மாண்பினை வெண்ணெய் நல்லூர்ச் சடையன் வாயிலேயே காணலாயினர். வள்ளலாய் வழங்கி வாழ்ந்த மன்னவர் கணக்கிறந்தோர் உள்ளவர் உண்மையேனும் இப்புகழ் யாரே பெற்றார்! T. N. சேஷாசலம்.

64 பக்கம்

ஆனந்த விகடன்

இதுகாறும் 48 பக்கம் விஷயங்களுடன் வெளிவந்த ஆனந்த விகடன் இந்த ஆவணி மாதம் முதல் 64 பக்கங்களுடனும் ஏராளமான படங்களுடனும் வெளிவரும் என்பதைச் சந்தா நேயர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம். சிறந்த எழுத்தாளரிடமிருந்து கட்டுரைகளைக்கொண்டது. மாதப் பத்திரிகைகள் எல்லாவற்றிலும் சிறந்தது "ஆநந்த விகடனே". "ஆனந்த விகட"னிலுள்ள ஒரு பக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று ஒரு சந்தா நேயர் நமக்கு எழுதியுள்ளார். நீங்கள் ஒரு வருஷத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா?

வருட சந்தா :— இந்தியா, பர்மா, ஸிலோனுக்கு

தபால் கூலியுள்பட ரூ. 1—0—0 வெளி நாடுகளுக்கு முன் பணம் ரூ. 1—4—0

ஆனந்த விகடன் ஆபீஸ், 244, தங்கசாலை வீதி, மதராஸ்.

தந்தி விலாசம்:—"விகடன்" மாதிரி காபி இனம். டெலிபோன் நெ. 3311.

அகப்பொருள் வரலாறு

(695-வது பக்கத் தொடர்ச்சி)

உடன்போக்கு.

அங்கே அவர்கள் செய்தி அவ்வாறாக, இங்கே வீட்டைவிட்டகன்ற தலைமகளை மறுநாட் காலையில்வெகு நேரமட்டுங் காணாது செவிலித்தாய் தன் மகளையுற்று, "உன்னைவிட்டு ஒருபோதுந் தனித்துச் சென்றறியாத உன்றலைவி இன்று தனித்து எங்குச் சென்றனாள்? நீ வருத்தமுற்றிருப்பதேன்? உற்றதை ஒளியாதுரை." என்றாள். அதற்குப் பாங்கி, "அம்ம, கேள். உண்மையாக நான் ஒன்றையுமறியேன். ஆனால் அவள், முன்னொருநாள் கொல்களிறொன்றின் கையினின்று தன்னை விடுவித்துக் காத்தருளிய காமனெனத் தகைய காளையைத் தவிர்த்து வேறெவற்கோ தன்னை மணஞ்செய்து கொடுக்கத் தன் தாய்தந்தையருந் தமரும் நேர்ந்ததை அறிந்து நேற்றெல்லாம் மிகவும் மனநொந்து வருந்தி அழுதுகொண்டிருந்தாள். நான் எவ்வளவு தேற்றியும் அவள்மனம் தெளியவில்லை. ஒருகால், காந்தம் வலித்த இரும்பைப்போல அவனால் வசிகரிக்கப்பட்டு அவள் அவனைப் பின்தொடர்ந்து சென்றுவிட்டனளோ, என்னவோ?" என்று நடந்ததை முற்றும் மறைக்காமலும் நன்றாய் வெளிப்படுத்தாமலும் பதிலுரைத்தாள். அதைக் கேட்ட *கைத்தாய், "ஆம், ஆம், அப்படித்தானிருக்கும். இக்கருத்தை உட்கொண்டேதான் அவள் முன்னொரு நாள்,

"வன்றோ ளிராம னொடுசீதை தங்கள் மனைகடந்து
சென்றோர் வனம்புகுந் தாளென்பர். மாசில் மடந்தையர்க்கு
நன்றோ அதுபிழை தானோ?"

என்றும், நேற்று "நங்குலக்கொடியாகிய வள்ளி,யாரையும் நீத்து முன் முருகனோடு சென்றதற்குக் காரணமென்ன?" என்றும் என்னைக் கேட்டாள். அன்றியும்,

"மறியுங் கயலுமனையகண் ணாள்வரிப் பந்துதந்தும்,
செறியும் பைங்கிளி செங்கையிற் றந்தும், செழுந்திவலை
எறியுந் திரையென் றிறுகவெற் புல்லியும் இன்னுமின்ன
அறியுங் குறிகள் பலசெய்தாள்.

இவற்றின் குறிப்பை அறியாத பாவியேன் இனி என்னறிவின்மையை நொந்தாவதென்? இதனை மெல்ல அவள்தன் நற்றாய்க்கறிவித்து மேலாவன செய்வதே கருமம்." என்று தெளிந்து, தன் மகளையும் உடன்கொண்டு நற்றாயிடஞ் சென்றாள். சென்று அவள் முன்னர்க் கலங்கிய முகத்தொடுநின்று "அன்னாய், நம்மகள் செய்த காரியத்தை உனக்குணர்த்த என்னால் எழவில்லை. நேற்று நள்ளிரவில் அவள் நம் வீட்டைவிட்டு எங்கோ போய்விட்டாள். நான் பலவகை நாடிப் பார்த்தும் ஒன்றும் புலப்படவில்லை. ஆனால் முன் பேதைப்பருவத்தே தனக்கு நறும் பூக்கொய்து மாலை தொடுத்துத் தந்தும், சாய்ங்கோரை பறித்துப் பாவை புனைந்தளித்தும், பின்பேதைப் பருவத்தே தன்னைக் களிற்றினின்று விடுத்தும் சுனையினின்றெடுத்தும் உயிர்காத்தருளியும், பலவாறுதவி புரிந்த பணைத்தோளண்ணலையன்றிப் பிறரொருவரையுந் தான் மணப்பதில்லை என்றும், அது நேராதாயின் உயிர்விடுவல் என்றும் பலகால் என் மகளிடம் அவள் கூறியதுண்டாம். அவளது பருவமுதிர்ச்சி கண்டு சின்னாள்முந்தி நீங்கள் பிறர்க்கவளை மணம் பேசலுற்றதை உணர்ந்து அதனைத் தடுப்பதற்கு வேறொருபாயமுந் தோராது தன் மனதுக்கிசைந்த மணவாளனோடு நங்கை நங்கையகன்று விட்டாளென்று தெரிகிறது. விதியை விலக்க யாரால் முடியும்?

தொடுப்பார் தொடுத்தலர் தூற்றும் படிவந்து
சூழ்விதியைத்
தடுப்பார் எவர்? இனிச் சாற்றுவ தென்கொல்?
தடத்துமுன்வீழ்ந்
தெடுப்பா னொருவன் இருப்பநின் றூர்தம்
இருநிதிக்குக்
கொடுப்பான் இசைந்தனி ரென்றுசென் றாள்நங்
குலக்கொடியே."

என்று நடந்ததை நவின்று, பின்னும், "அவளது பருவத்திற்கு இஃதொவ்வாதாயினும் அவளுக்கிது நல்லறமே. இனி அவளுக்கு நன்மையாவதும் அவனுக்கினியன செய்து அவனை வழிபடுதலேயாம்." என்று அவளது கற்புநிலையையும் மேம்படுத்திப் பேசினள். தலைவி தலைவனுடன் போனதை உணர்ந்த நற்றாய் அருந்துயருழந்து, "நீடவம்புரிந்து நான்பெற்றெடுத்த நங்கையின்று பாடவம் புரிந்தென்னைப் பரிதவிக்க விட்டகன்றாள்; அந்தோ! இனி நான் என் செய்கேன், என்று அவளை இனிக் காண்பேன்?

முன்பி ழைத்த வறுமையின் முற்றினோர்
பொன்பி ழைக்கப் பொதிந்தனர் போலவே

பெறலரும் பெண்மணியைப் பாவியேன் பெற்றிழந்தேன்." என்று பலவாறு பன்னியேங்கினள்; பிறகுதன் மகளை நினைந்து, "எம்மையெல்லாம் நீத்து ஏதிலன்பின் கொடுஞ்சுரத்தேக எவ்வாறு துணிந்ததுன் மனம்?

பூவையுண் டோபுனக் கிள்ளையுண் டோவென்
புதியமன்றற்
பாவையுண் டோபெற்ற பாவியுண் டோகுன்று
பார்த்தழைக்கும்
தேவையுண் டோகற்ற சிற்றிலுண் டோமற்றென்
குற்றமுண்டோ
யாவையுண் டோசொல் எனக்குநீ யேகவ்
விருஞ்சுரத்தே"

என்றாற்றி அழுதாள்;பிறகு பாங்கியைக் கடுத்துநோக்கி, "நீ இதனை முன்னமே எமக்கறிவித்திருந்தால் அவளிஷ்டப்படியே யாம் மணமுடித்திருப்போம்; இக்கடுவையும் நேர்ந்திராது. உண்மையை உரையாமல் ஒளித்தன்றோ என் பெண்மானை நீரில்லா வெஞ்சுரத்தே வீணே நீ செலவிடுத்தாய்" என்று கடிந்துகூறிப் பின்னும் பிரிவாற்றாது வருந்திச் செவிலியொடும் பாங்கிமாரோடும் பிறரோடும் பலவாறு பொருமிப் புலம்பினள்; பிறகு "என்மகள் சென்ற கொடுஞ்சுரம் வெம்மை தீர்ந்து தண்ணென்றாகுக;

வானஞ் சொரிக மழை;கதி ரோனை மறைக்கமஞ்சு;
கானந் தழைக்க; கனமயி லாலுக; காவிடைநற்
றேனுஞ் சுரும்புஞ் செறிக;தண்ணீர்க்குளஞ் சேர்ந்திடுக
மீனஞ்சு கண்ணி விடலையின் போகிய வெஞ்சுரமே"

என்று தெய்வத்தைப் பரவி வேண்டினள்; "என் மகளைச் சீக்கிரம் வரும்படி கூவியழைத்திடுவாய்

பணங்களஞ் சாலும் பருவர
வார்த்தவன் தில்லையன்ன
மணங்கொளஞ் சாயலும் மன்னனும்
இன்னே வரக்கரைந்தால்
உணங்கலஞ்சா துண்ணவாம்; ஒண்ணிணப்பலி
ஒக்குவல், மாக்
குணங்களஞ் சாற்பொலி யுந்நல சேட்டை
குலக்கொடியே"

என்று காகத்தைக் கைகூப்பித் தொழுதாள்; "மலர்ந்த காந்தளைக்கண்டுபாந்தளென்றெண்ணித் துண்ணென்று கைம்மலராற் கண்புதைத்துப் பதைக்கும் எம்மடமயில் தனித்தின்று ஒரு விடலையின் வெஞ்சுரம் போக விரும்பியவாறு நன்று, நன்று" என்று சோர்ந்திரங்கினள்.

இவ்வாறு நற்றாய் தணியாத்துயரந்தலைக்கொண்டு தவிக்கக் கண்ட செவிலி, "அன்னாய், உன் மகளைக் குறித்து நீ இவ்வாறு கவன்று புலம்பி நையல்வேண்டா. நான் தேடிச் சென்று அவள் புக்கவிடம் புக்கு அவளைக் கொணர்தருவேன். அதுகாறும் வருந்தாது ஆற்றியிரு" என்று அவளைத் தேற்றித் தானுடனே தலைவியைத் தேடப் புறப்பட்டாள். நல்விரிச்சிபெற்று உற்சா

*கைத்தாய்-கையிலெடுத்து வளர்க்குஞ் செவிலித்தாய்.

கத்தோடு புறப்பட்ட செவிலி சோதிடம் வல்ல நான்மறையாளரையுற்று வினவி, "நலமுடன் தலைவி நாலைந்து நாளில் மீண்டு வரப்பெறுவீர்" என்று அவருரைப்பக் கேட்டு, உளமகிழ்ந்துசென்றாள். சென்றவள் சிற்றடியும் பேரடியுந் தொடர்ந்துசென்ற சுவடுகண்டு, அதுதான் அவர்கள்சென்ற வழியென ஓர்ந்து, இருமருங்கும் நாடி, எதிர்வருவோரை உசாவிக்கொண்டு சென்றாள். இவ்வாறு உசாவிக்கொண்டு போகையில் அவள் "திருமகளனைய எம்மகளொருத்தி திருமாலொத்த செம்மலொருவனுடன் இவ்வழியே செல்லக் கண்டீரோ?" என்று தன்னெதிரே சடைதரித்து, என்பணிந்து, கட்டங்கந்தாங்கி, திருநீற்றுப் பொக்கணமேந்தி, வெண்ணீறு சண்ணித்த மேனியராய் வரும் மாவிரதியரை முந்தி வினவியும், சிறிதுதூரமப்பாற் சென்று, முன்வரு முக்கோற்பகவரை முன்னி,

"உறித்தாழ் கரகமும், உன்றுமுக் கோலும்,
உடுத்தசெவ்வான்
எறித்தா லனைய இருந்துவ ராடையும்,
இந்திரவி
மறித்தா லனைய குடையுங்கொண் டேவரு
வீரொருவன்
செறித்தாழ் குழல்வல்லி முன்செல்லு மோவிந்
நெடுஞ்சுரத்தே"

என்று கேட்டும், நல்விடைபெறாது மனமுந் தளர்ந்து வெகுதூரம் நடந்து, அந்திப்பொழுதில் அயலேயுள்ளதொரு சிற்றூரைச் சார்ந்து எயினர் குடியொன்றில் அன்றிராத் தங்கினள். தங்கியிருந்தகாலை, அவள் தம்மகளின் அங்கவடையாளங்களை எயிற்றியர்க்குக் கூறி, "இத்தகைய மங்கையொருத்தி செவ்வேளன்ன செம்மலொருவனொடு இவ்வழிப்போகக் கண்டீரோ நீர்?" என்று கேட்க, அவர்கள், "ஆம், கண்டதுண்டு. அவர்கள் ஓரிரா எம்மிடைத்தங்கிச் சென்றார்கள். நல்குடிப் பிறந்த செல்வமக்களைப் போன்றிருந்த அவர்கள் இவ்வாறு தனித்துக் கால்நடையாகச் செல்வதற்குக் காரணம் யாதென வினவியறிய யாங்கள் மிகவும் விரும்பினேமாயினும், எம்மைப்போல் எளிய நிலையினோர்க்கு அது தகாதெனவெண்ணிப் பேசாதிருந்துவிட்டோம். இது நிகழ்ந்து மூன்றுநான்கு நாளிருக்கும்." என்று சொன்னார்கள். அதைக்கேட்டு, அவள் அவ்வழியே போனால் தம்மகளை நிச்சயமாய்க் காணலாமென்ற நம்பிக்கையோடு மறுநாட் காலையிலெழுந்து எதிர்வருவோரையெல்லாம் முன்போலவே வினவிச் சென்றாள். செல்லும்போது தூரத்தே காதலனுங் காதலியும்போல் இருவர் கலந்து வரக்கண்டு அவர்களே தம்மகளும் அவளன்பனும் எனக்கருதி அவள் உவகையோடு விரைந்து சென்று பார்க்கையில் அவர்கள் அன்னியர்களாக இருக்கக்கண்டு, சற்று மனஞ்சாய்ந்து தயங்கிநின்று பின்பு,

"எம்போல் இனங்களும் ஈன்றாளுந் தேடி
இடாமுந்த
நம்போல் வனப்பெய்தி இச்சுரம் போனதை
நோக்கினிரோ
கம்போ கமுகோ எனுங்கழுத் தாளுமோர்
காளையுமே."

என்று அவர்களைக் கேட்டாள். அதற்காண்மகன், 'இருதினங்களுக்குமுன் இத்தகையாரிருவரை நாம் வருவழியில் எதிர்ப்பட்டதுண்டு. கான் கண்ணுற்ற சிங்கமன்னனும், என்னுவியன்னளிவன் கண்ட மயிலியலாளும் கானுஞ்சுரமுங்கடந்து இன்று தண்புனனாட்டைச்சார்ந்திருப்பார். நீ இனிச் செலவொழிக." என்றான். அவ்வாறு சொலக் கேட்டும் மகளைக்காணாது வானாமீன மனமில்லாது முன்சென்றசெவிலி இருகாதங்கடந்து,சிறுகுன்றுகள் பொருந்தி மாமரமடர்ந்ததொரு கானகத்துப்புக்காள். புகுந்து அதனூடு போகையில் ஒரு மரத்தருகே மதகளிற்றினடிச்சுவடு பலவும் அவற்றயலே ஆண்மகனொருவன் பேரடிச்சுவடுகளும், சற்றப்பாலொரு பராரைமரத்தின் பாங்கர் சிற்றடிச்சுவடு சிலவுங் கண்டஞ்சி நடுங்கி அவள், "அந்தோ, காட்டியானையொன்று வரக்கண்டு எம்மகள் பயந்தோடி ஒளித்தவிடம் இதுபோலும். அதுபோலும் அவன் அக்களிற்றைப் பொருது தொலைத்தவிடம்.

கவையே யழற்கண் ணெயினரை யஞ்சாக்
களிற்றடிகள்
இவையே;எம் மன்னத்தைக் கைக்கொண்டோ
டியவக் கள்வனடி
உவையே;செம் பாரிடைப் பொற்றா மரையின்
உதித்திருந்த
இவையே வினையே னெடுத்தமின் பொன்னடி
யின்சுவடே"

என்று தலைவனது வீரத்தை வியந்து அவ்வழியே செல்லாநின்றாள். செல்லாநின்றவள் எதிர்வரும் முதியோர் சிலரைக் கண்டு முன்போல அவரையும் வினவினாள். அதற்கவர், "நீ கூறுமவரை யாம் வருமார்க்கத்தில் ஒரு குன்றத்திடைக் கண்டோம். அவ்விருவருடைய கண்கொள்ளாக் கவினைக் கண்ணுற்றுப் பெரிதும் வியந்து மகிழ்ந்தோம். இதுபொழுது அவர்கள் ஓரிடுக்கணுமின்றித் தம்மூரைச் சென்றணைந்திருப்பார். இனி நீ மீள்வதே கருமம். திரும்பி எம்முடன் போதுக." என்று கூறினர். கூறவும் மீளாது கவலாநின்ற செவிலிக்கு அவர் உலகியலை எடுத்தோதுவாராய், "மகளே, மலையில் வளர்ந்த சந்தனமும், கடலிற் பிறந்த முத்தும், வாவியிற் பூத்த மலரும் பிறந்த இடங்கட்குச் சிறிதும் பயன்படாது தம்மை விரும்பியெடுத்து அணிபவர்கட்கே பயன்பட்டு நிற்கும். அதுபோல மகளிருந் தம்மைக் கொண்டார்க்கன்றிப் பெற்றார்க்குப் பயன்படார்.

பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கவைதாம் என்செய்யும்?
நினையுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே;

சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவைதாம் என்செய்யும்?
தேருங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே;

ஏழ்புண ரின்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதாம் என்செய்யும்?
சூழுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே.

என்று சிறந்த பல ஏதுக்களை எடுத்துக் காட்டித் தெருட்ட ஒருவாறு தெளிந்து, மேற்செலவொழிந்து மீளுவதற்கு அவளொருப்பட்டாள். 'இக்கானெங்கும் எம் மடமகளை நாடித் திரிந்து என் கால்கள் சலித்தன. அன்புடன்கலந்து எதிர்வருவோரை உற்றுப் பார்த்துப் பார்த்து என் கண்களும் நோக்கிழந்தன. அவளைக் கண்டிலேன். ஆவியைப் போக்கிலேன். வாளாநின்று வாயாற் புலம்புவேன். பெண் பெற்ற பாவிக்கு வினையேன் சென்று சொல்லுவதெவனோ" என்று பேதுற்ற நெஞ்சினளாய்ச் செவிலி தன்னூருக்குத் திரும்பிவந்து, மகள் காணமற்சென்ற நான்முதல் ஊணுமுறக்கமுமொழிந்து, ஒருநிலையுறாது துயர்க்கடலில் ஆழ்ந்துகிடந்த நற்றாயையுற்று,

"ஏடார் மலர்க்குழல் வல்லியை, அன்னை, இத்
தீவினையேன்
நாடா இடமில்லை ஞாலத் தகவையின்.
நன்கமலக்
காடார் பழன கழனிநன் னாடு
கடந்துதன்னூர்
வாடா வளமனை கொண்டுசென் றானந்த
வள்ளலின்றே.

இன்னுமிரண்டொரு நாளில் அவர்கள் திரும்பி வந்திடுவார். இனித் துறந்தி உனது துயரமும் ஐயமும்" என்று தேற்ற அவளும் ஒருவாறு ஆற்றியிருந்தாள்.

இவ்விடத்துச் செய்தி இவ்வாறாகத் தலைமகளை உடன்கொண்டு சென்று தனது நன்னகர் சார்ந்து செம்பொன்மாளிகையிற் சான்றோர்முன் பல்கிளையேத்த நன்மணம்புணர்ந்த தலைமகன் அவளுடன் நாளுவிதமுறு போகமும் நுகர்ந்தின்புற்றிருந்த நான்வாய்ப் புதுமண மதுவுண்டு களித்து, தன் தாயர், தந்தை மனை, ஊர், பொய்தலாடிடம், வண்டலாயம், மறந்ததெல்லாம் அவள் நினைத்தாள். அதைக் குறிப்பாலுணர்ந்த நெடுந்தகை அவளை அவடன்னூருக்குக் கொண்டுபோய்விட விரும்பி நல்லதோர் நாளில் அவளைத் தன் தேர்மீது கொண்டு,

"துப்போது சேயிதழ்த் தூநகை யாய்வெஞ்
சுரத்திடைநாம்
அப்போ திருந்த அகன்பொழி லாமிது;
ஆரமூலைக்
கொப்போ தியபொன் முகைக்கன்னி காரம்உது."

என்று முன்னாள் தாம் நடந்துபோன வழிகளையும், தங்கிய இடங்களையும், ஆங்காங்கு நேர்ந்த சம்பவங்களையுங் காட்டி நினைவூட்டிச் சென்று, மேலோங்கித் தூரத்தே பிறங்கிய மலையைச் சுட்டிக் காட்டி

"அது நீ
எப்போதும் வைகும் இளமரக் காவு மிலஞ்சியுமே"

என்று தனதூரினணிமையைக் கூறக்கேட்ட தலைமகள் மனத்தே உவகை பொங்க முகமலர்ந்து நிமிர்ந்து நோக்கிப் பெருமகிழ்வுற்றாள். அப்பொழுது இரவுவந்தணுகிற்றாக, இருளுற வீடெய்துவது இயல்பன்றென எண்ணி, அயலதோர் குறிச்சியில் அவ்விராத் தங்கி மறுநாள் ஊர் புகுவதே உசிதமெனத் தேர்ந்து அவன் அவளைத் தேரினின்று மெல்ல விறக்கி, தேரைப் பக்கத்ததோர் பொழிலில் நிறுத்தி, குறிச்சி நோக்கி அவளுடன் சென்றான். செல்லாநிற்கையில் அவ்வழியே சிலர் முன்செலக் கண்டு தலைமகள் அவர்களை வணங்கி வினவி அவர்களும் தனதூருக்கே செல்பவரென அறிந்து, "தனது மனங்கொண்ட வதுவைக்கிசையாரைத் தணந்து காதலனுடன் கான்யாறுங் கடுஞ்சுரமுங் கடந்து சேணகன்ற மடமகள் தீதின்றிவந்தாளென்று என்னைப் பிரிந்த நாட்டொடங்கிப் பேதுற்றலமரும் என் தோழியர்க்குணர்த்துமின்" என்று அவர்களை வேண்டினான்.

அவர்களும் அவ்வாறே சென்று அவர்களுக்குணர்த்தக் கேட்டு அவர்கள் கட்டிய கலையுங் குழலுஞ்சரிந்து சோரதா இட்டிடையிற்றிட ஈண்டியோடி அன்னைக்கதனை அறிவித்தார். அதைக் கேட்டதும் இழிந்தபேர் துயர்க் கடலினின்று கரையேறிய தாய் உடனே களிப்பெனுங் கரையிலாக் கடலுளாழ்ந்தனள். அவ்வாறாழ்ந்தவள் அது பொய்யோ மெய்யோவெனவும், மேல் அவர்மணம் எவ்வாறு முடியுமோவென்றுந் தெளியாது கவர்பட்டுக் கவன்ற உள்ளத்தளாய் வேலனை அழைத்து, "எம்மகளை உடன்கொண்டு சுரம்போன மீளிமொய்ம்பன் அவளை மீட்டும் எம்மில்லிற்றருவனோ? எம்மனைக்கு அழைத்து வந்து இங்கே மணமயர்ந்து கொள்வனோ, அன்றித் தன் மனைக்கேகி அங்கே கடிமணம் புணர்வனோ? கூர்ந்து நோக்கிக் கூறுக." என்று வினவினாள். அதற்கவன், "மணம் அவர்க்கு முந்தியே முடிந்துவிட்டது. இன்று நாளை அவர்கள் திரும்பி வந்துவிடுவார்கள்." என்று சொல்லி அகன்றான்.

விடிந்து செல்லவெண்ணி வழியிடைத் தலைவியுடன் தங்கிய தலைமகன் மீண்டுமாலோசித்து, பொம்மெனச் சென்று அவர்மனையிற் புகுவதைவிட முந்திப் பாங்கனை அனுப்பித் தாம் மணம்புரிந்து மீண்டதைப் பாங்கிக்கும் அவள் முகமாய்த் தாய்தந்தையர்க்குந் தெரிவித்து, அவர்கள் தம்மை முனியாது ஏற்றுக் கொள்ளுமாறிசைவித்துப் பின்பு அவர்முன் செல்வதே நலமெனக் கருதி அவனை அங்கே அனுப்பினான். அவனுஞ் சென்று அதனைப் பாங்கிக்குணர்த்த, அவள் தன்னன்னைக்குரைக்க, அவள் நற்றாய்க்கியம்ப, அவளுஞ் செவ்வி பார்த்துத் தனது ஐயனுக்கறிவித்தாள். அதைக் கேட்டதும் தந்தையுந் தமருந்

தெரிகணை நோக்கிச் சிலைநோக்கிக் கண்சேந்
தொருபக லெல்லை உருத்திருந் தாறி
இருவர்கட் குற்றமும் இல்லையா லென்று
தெருமந்து சாய்த்தார் தலை.

அற்றைப் பிற்பகல் தலைவியுடன் தலைமகன் அங்குற்று, அவர்களை அடிவணங்கி நிற்ப, அவர்களும் முன்னர் முளைத்த முனிவு நீங்கி, முகமலர்ந்தாசிகூறி, அவனை வரவேற்று, செய்கடன்யாவுஞ் செய்துபசரித்தார்கள். அவ்வாறுபசரிக்கப்பெற்று அவர்களில்லிடைச் சில பகல் தங்கிப் பிறகு அவன் தலைவியைத் தன்னகங்கொண்டு சென்று இல்லறம் இனிதாற்றி இன்புற்றிருந்தான்.

K. இராமரத்நம் ஐயர்.

தமிழ் நாடெங்கனும் புகழ்வாய்ந்த
எங்கள் நிகரிலாத
"ஆநந்த குணபோதினி"
ஆடி மாதமுதல் ஆங்கில மாத ஸஞ்சிகைகளையொப்ப நவீன நாகரீக உருவுடன்

அமிர்த குணபோதினி

என்னும் புதிய பெயர் தாங்கிப் புதுவிதமாக 3-வது ஆண்டு] வெளிவருகின்றது.[3-வது ஆண்டு பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S.G. இராமாநுஜலு நாயுடு அவர்களால் இப்பத்திரிகை எழுதப்பட்டு வருகிறது.

அநுபவ ஞானபோதனையில் இதுபோன்ற முதன்மையான மாத ஸஞ்சிகை வேறில்லை. கௌரவமான விகடம் இப்பத்திரிகை யொன்றில் தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஜநவிநோதினி, இதுவே விசித்திர விலாஸம், இதுவே விகடப் பொக்கிஷம், இதுவே அநுபவ ஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோதகம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி, இதுவே ஆநந்த தீபம் என்று எண்ணலாம். பதினாயிரம் சந்தாதாரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தாதாரர்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனிமையாய், நினைக்க மனோகரமாயிருப்பது எது? எங்கள் "அமிர்தகுணபோதினி"யே. 56-பக்கங்களுடனும் ஒரேரூபாயைச் சந்தாவாகக் கொண்டுள்ள உயரிய மாதப் பத்திரிகை தமிழ் நாட்டில் இது ஒன்றேதான். இதற்குச் சமமான தமிழ் மாத பத்திரிகை எதுவுமே கிடையாது. இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தாரூபாய் ஒன்றே. வெளி நாடு ரூ. 1 4 0 மாதிரி காப்பி இனாம்.

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்த குணபோதினி ஆபீஸ்,
302, தங்கசாலை வீதி, சென்னை.

உ

வியாஸங்கள்.

வியாஸங்கள்! வியாஸங்கள்!!

வியாஸங்கள் மிக எளிதில் அறிந்து அதன்படி நடந்து நன்மையடையக் கூடியவிதமாக எழுதப்பட்டுள்ளன.

கீழ்கண்ட வியாஸங்கள் ஒவ்வொரு தமிழரும் வாங்கி வாசித்துப் பயனடையக் கூடியனவாகும். நமது முன்னோர்களுடைய உபதேசங்கள் பலவற்றை நம்மில் பலர் அறியாமலிருக்கிறார்கள். காரணம், அவையாவும் செய்யுளாக இருப்பதினால். இந்த வியாஸங்கள் அச்செய்யுட்களையே பெரும்பாலும் தழுவி வசனமாக எழுதப்பட்டிருக்கின்றன.

	ரூ.	அ.		ரூ.	அ.
அன்பு	0	1	பொதுமதம்	0	2
பலவகை மனிதர்	0	1	ஆறுதாரம்	0	2
தவம்	0	1	சந்தேகம்	0	2
பொறுமை	0	1	கற்பு	0	3
இருவினை	0	2	அஸ்தபூஷணம்	0	4
இல்லறம்	0	2	பதினாறுபேறு	0	4
ஆலயவழிபாடு	0	2	என் தந்தையார்	0	6

மேல்கண்ட பதினான்கு புத்தகங்களையும் ஒரே தடவையில் வாங்குபவர்களுக்கு ரூபாய் இரண்டேக்குக் கொடுக்கப்படும்.

தபால் சார்ஜ் இனாம்.

இன்றே எழுதுங்கள்!

நவீனகதா புத்தகசாலை,

மங்கமாரி வீதி, இரங்கூன்.

கம்பராமாயணம்

பாலகாண்டம்

T.N. சேஷாசல ஐயர், B.A.,B.L., பதிப்பு.

சிற்றடக்கமாய் நல்ல கட்டிடத்தில் புதிய முறையில் பொருள்விளக்கி இப்பதிப்புப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்குப் பதவுரை எழுதிவிட்டால் படிப்பவர் தம் முயற்சியால் பொருள்தேடும் பழக்கம் பெறாது போய்விடுவர். ஆதலால் இப்பதிப்பாசிரியர் பதம் பிரித்துத் தொடர்விரித்து அன்வயப் படுத்தி அவாய் நிலைகளை வருவித்து, அரும் பதங்களுக்கு அர்த்தம்கூறி விசேஷக் குறிப்புக் களையுஞ் சேர்த்துக் கூடியவரையில் கம்பருடைய வார்த்தைகளாலேயே அவர் செய்யுளின் கருத்தை விளக்குகின்றார்.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்கு இவ்வாசிரியர் காட்டும் பொருள் புதியன. இவர் செப்பும் உரையாவும் கவியின் இருதயத்தைத் தழுவி எழுதியன.

விலை ரூ. 3 0 0

(வி. பி. சார்ஜ் வேறு)

மானேஜர்,

"கலா நிலயம்"

11, வெள்ளாளர் தெரு,

புரசைபாக்கம்,

சென்னை.

ஏமாங்கதத்

திளவரசன்

T. N. சேஷாசலம், B.A.B.L., இயற்றியது.

இலக்கிய நலங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதல் காதை. அன்பினது வன்மையும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்துசெய்யும் துன்மதிச் சூழ்ச்சியும் கலந்து இக்கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஓர் தனிச்சுவை உளதென்பதை இந்நூலினுள் காணலாம். ஆங்கிலக் கதைவல்ல ஆசிரியர்களின் நூலினுள் தோன்றும் சம்பாஷணை நயத்தைத் தமிழில் தன்னுள் ஏற்ற நூல் இதுபோன்றிருப்பன வெகு சில.

விலை ரூ. 1 0 0

(வி. பி. சார்ஜ் வேறு.)

மானேஜர்,

"கலா நிலயம்"

11, வெள்ளாளர் தெரு,

புரசைவாக்கம்,

சென்னை.

KAMBAN'S KOSALA

or

A Poet's Plea for Culture

by T. N. Seshachalam B.A., B.L., In English

A Succinct exposition of the Poetic Art and the Political Philosophy of Kambar as can be gleaned out of the First Four Padalams of Balakandam.

With a Foreword by Dr. James H. COUSINS

This book is an excellant commentry on the great truth that the art of literature is something of an abstraction, an idealisation that purposely leaves the realities aside. The scope and the purpose of the book will be clear from the author's preface which is quoted below :—

THIS little book is ambitious. Taken by itself it hopes to interpret an ancient seer-poet's judgment on the conflict that is now rampant on all sides between conservative harangues and socialistic utopias. But its main purpose is to introduce to the world of thought and letters, the great Kamba Ramayanam, an extraordinary work of art and book on life, but which would without elucidation be perplexing to all the western methods of analysis and reasoning.

About Kamban, as with many other great personalities, much is not known beyond his works. He lived nearly ten centuries ago and was accepted as the greatest among the poets of his time. The Ramayana which be composed has not been surpassed by anything in the epic literature of the Tamil land. The magnificent classics of the earlier academicians were all his heritage, and his imagination and native genius were considerably assisted by his scholarship. The hoary literatures and philosophy of India alone could have cradled such a genuis, a genius highly poetical, pre-eminently moral, transcendental by the inspired revelations of its seer's ecstasy and best formed to clarify the elemental Truths of life here and hereafter.

Kamban professes Valmiki's Sanskrit epic of the same name as the original for his Ramayanam. But this is almost akin to Shakespeare's indebtedness to Boccacio or Plutarch. Kamban's Ramayanam is the embodiment of a mind, the most creative that ever engaged in the exact portrayal of the details of actual existence, in the dazzling speculations of life among the gods and in the profound complications of passions, human and superhuman. The eternal story of Rama runs in crystal stream of fortytwo thousand three hundred and forty eight lines of sublime grandeur glorifying the Creator and reflecting His creation.

With the Kural and the Gita, the Ramayanam is the most ennobling book that has ever been written. Like many other good things, however, it is not generally understood and made sufficient part of one's being The realization of the conception of life, individual and social, that gathers and takes shape in one's mind as this wonderful epic is read and re-read ought to recast the destiny of mankind. Price Re. 1-4-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "KALANILAYAM" 11, Vellala St., Purasawalkum, Madras.

வர்த்தமானம்.

ஒரு லக்ஷம் நன்கொடை:—செத் தேவிதாஸ் பிரபுதாஸ் கோத்தாரி என்னும் பெரிய செல்வர் பம்பாயில் பிரசவ வைத்திய சாலை ஏற்படுத்துவதற்காக ஒரு லக்ஷ ரூபாயை நன்கொடையாகக் கொடுத்துள்ளார் என்று தெரிகிறது.

***

கமலா பிரசங்கம்:— மஹாராஷ்டிர அறிஞரான ஸ்ரீமான் எம். ஆர். ஜெயகர், கல்கத்தா சர்வ கலா சாலையாரால் 1929 வருஷத்திற்குக் கமலாவின் பேரால் நடைபெறும் பிரசங்கத்தைச் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். 'இந்தியக் கலைச் சிறப்பு' என்பதே விஷயமாகும்.

***

ஆப்கன் மாணவர்கள்:—ஆப்கன் மாணவர்களில் 16 பேர் அக்டோபர் மாதம் 6-ந்தேதியன்று பம்பாய் மூலம் கான்ஸ்டாண்டிநோபிலுக்குப் பிரயாணம் ஆனார்கள். இவர்கள் போவது இராணுவப் பயிற்சி பெறவென்று தெரிகிறது. அவர்களது செலவை ஆப்கன் அரசாங்கத்தார் ஏற்றுள்ளார்கள் என்று தெரிகிறது. இப் பதினாறு பேர்களில் 6 வயதுள்ள சிறுவர்களும் பெண்களும் உளர்.

***

துருக்கியில் சீர்திருத்தம்:—துருக்கி அரசாங்கத்தார் தங்களது உருது பாஷையின் எழுத்துக்களை ஐரோப்பிய எழுத்துக்களாக மாற்றவேண்டி நாடகக் கொட்டையிலும் மற்றப் பொழுது போக்கு விடங்களிலும் மாஜிக் லாண்டர்ன் மூலமாகவும், பிரசங்கம் மூலமாகவும் ஜனங்களுக்குப் போதித்து வருகின்றனர். இத்திருத்தத்திற்கு விரோதமா யிருந்தவர் மூவர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவருக்கு இரண்டு வருடக் காவல் தண்டனை அளிக்கப்பட்டது. இருவர் விடுதலை அடைந்தனர்.

***

சென்னைச் சட்டசபை:—சென்னைச் சட்டசபை சென்ற திங்கட்கிழமை கூடிற்று. அங்கத்தினர் கேட்ட வினாக்களுக்கு விடையளித்த பின்னர், ஸ்ரீமான் எஸ். சத்தியமூர்த்தி ஐயர், காலஞ்சென்ற சுப்பிரமணிய பாரதியாரின் பாட்டுப் புத்தகங்களைப் போலீசார் பறிமுதல் செய்த விஷயமாய் ஆலோசனைசெய்ய வசதி தரவேண்டுமென்று ஒரு பிரேரேபணையைக் கொண்டுவந்தார். ஸ்ரீமான்வெங்கடாசலம்செட்டியார் ஆதரித்துப்பேசினார். இப்பறிமுதல் விஷயமாய் வழக்கு ஒன்று நீதிஸ்தலத்தில் இருக்கிறபடியால் அங்கு முடிவு ஏற்படுமுன் இதுவிஷயம் வாதிக்கப்படலாகாது என்று தலைவர் கூற, ஸ்ரீமான் சத்தியமூர்த்தி ஐயர், நாம் இங்கு வாதிக்கும் விஷயம் போலீசார் செயலும், பர்மா அரசாங்கத்தார் பறிமுதல் உத்திரவைப் பார்த்துச் சென்னை அரசாங்கத்தாரும் பறிமுதல் செய்ய அனுமதிதந்தது சரியோ என்பதுமே என்றும், ஆகவே அனுமதி வேண்டுமென்றும் கூறினார். அட்வகேட்டு ஜெனரல் அனுமதிதரல் கூடாதென எதிர்த்தார் எனினும், கடைசியில் அனுமதி தரப்பட்டது.

***

சர்வகட்சி மஹாநாடு:—சென்னைச் சர்வகட்சி மஹாநாடு சென்ற சனியன்று கோக்கலே மண்டபத்தில் டாக்டர் பெஸண்டின் தலைமையிற் கூடிற்று. காங்கிரஸ் காரர்களும், மிதவாதிகளும், மற்றக் கட்சியினரும் வந்திருந்தனர். சென்னையிலுள்ள ஜஸ்டிஸ் கட்சியார் மாத்திரம் வரவில்லை என்று தெரிகிறது. சென்னையில் காங்கிரஸ் தலைவரான ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாஸ ஐயங்கார் மாத்திரம் வரவில்லை. மஹாநாடு கடைசியாக, எல்லாக் கட்சியாராலும் ஒருமுகமாய் ஏற்கப்பட்ட நேரு அறிக்கையையேற்றது. முழுவிடுதலைக்கு முதற்படியாகக் குடியேற்ற நாட்டு உரிமையைத் தரவேண்டு மென்றும், இதை நாடெங்கும் பிரசாரம் செய்து ஜனங்களிடம் ஊக்கம் உண்டாக்க வேண்டுமென்றும், சைமன் கமிஷனைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்றும் தீர்மானங்கள் செய்யப்பட்டன. ஸ்ரீமான். ஸ்ரீநிவாஸ ஐயங்கார் கட்சியார் தாங்கள் இதை ஏற்காவிடினும் நேரு அறிக்கைக்கு விரோதமாய் ஒன்றும் செய்யப்போவதில்லை என்று கூறியுள்ளதாகத் தெரிகிறது.

***

ஹிந்து பத்திரிகையின் ஜூபிலி கொண்டாட்டம்:— ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு ஹிந்து ஆபீஸ் ஆசிரியக் கூடத்தாரும், மற்ற வேலைக்காரர்களும் சேர்ந்து முதலாளிகளுக்கு உபசாரஞ் செய்து வெள்ளிக்கோப்பை ஒன்றை அவர்களுக்கு அளித்தனர். ஹிந்துவின் சொந்தக்காரரான ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸன் எல்லாருக்கும் ஒரு மாதத்துச் சம்பளத்தை இனாமாகக் கொடுப்பதாகக் கூறினார். பின்னர் 9 மணிக்கு ஹிந்துவின் சொந்தக்காரர்கள் பொது ஜனங்களுக்கு ஒரு விருந்தளித்தனர். இதற்கு ஐரோப்பியர்களும் இந்து முஸ்லிம் கனவான்களும் வந்திருந்தனர். மாலையில் கோக்கலே மண்டபத்தில் திவான் பகதூர் கேசவபிள்ளையின் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு டாக்டர் சாப்ரு, டாக்டர் பெஸண்டு, ஸர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர், ஸ்ரீமான்களான எஸ். ஸ்ரீனிவாஸ ஐயங்கார், சத்தியமூர்த்தி ஐயர், யாகுப் ஹாஸன், வெங்கட்டராம சாஸ்திரி, டி. ரெங்காச்சாரியார் முதலிய பலர் வந்திருந்தனர். ஒரு உபசாரப் பத்திரம் ஹிந்துவின் சொந்தக்காரர்களுக்கும் ஆசரியருக்குமாக அளிக்கப்பட்டது.

***

பஞ்சாப் மாணவர் மஹா நாடு:—அக்டோபர் மாதம் 6-ந்தேதி பஞ்சாப் மாணவர் மஹா நாடு லாகூரில் கூடியது. மஹா நாட்டைத் திறந்து வைக்கையில் ஸ்ரீ லஜபதிராய் கூறியதாவது:—

கற்கும் நாளை வீண் போக்காது மாணவர் படித்து அறிவுப் பயிற்சி பெறவேண்டும். அப்பொழுதுதான் அறிவு வளர்ந்து புதிய சிந்தனைகளைச் செய்யக்கூடும். மேலும் மாணவர்கள் அரசியலில் சேரக்கூடாது என்பதை நான் பலமாகக் கண்டிக்கிறேன். மாணவர் அரசியலைப்படிக்கவும், பேசவும், அரசியலில் தலையிடவும்வேண்டும். இப்பொழுது நமக்கு அரசியல்தான் உயிராயிருக்க வேண்டும். மற்ற நாடுகளில் மாணவர் எல்லா உரிமையும் பெற்றுள்ளார். நாம் விடுதலை பெறுதிருப்பதினாற்றான் நமது மாணவர்களுக்கு அவ்வுரிமை கிடைக்கவில்லை.

இம்மஹாநாட்டுத் தலைவரான டாக்டர் அலாம் கூறியதாவது :—

இந்தியாவில் ஏற்படவேண்டிய, சமூக, மத, அரசியல் மாறுதல்களுக்கு இந்தியா மாணவர்களை நம்பியிருக்கிறது. லஜபதிராய் கூறியதுபோல் மாணவர்கள் அரசியல் பயிற்சி பெறவேண்டும். இப்பொழுது சர்வகலாசாலை செய்துவைப்பது வகுப்பு எண்ணமே. சர்வகலாசாலையில் சீர்திருத்தம் ஏற்படவேண்டும். சர்வகலாசாலையினின்று வெளிவருபவர், சீக்கியர், முகமதியர், புத்தர், ஜெயினர், இந்து என்ற எண்ணமிலாது இந்தியராயிருக்க வேண்டும். எல்லோரும் இந்தியர் என்னும் ஞாபகத்தை வளர்க்கத் துணைசெய்யாது போயின் சர்வகலாசாலையால் பயனில்லை."

THOUGHTS FOR STATESMEN

from

MONTESQUIEU AND TOCQUEVILLE

IN ENGLISH

by

T. N. SESHACHALAM B.A., B.L.

WITH A FOREWORD

by

Sriman S. Sreenivasa Aiyangar

The purpose and Scope of the book is well set out in the opening paragraph of the author's preface which is quoted below:—

The course of history may vary in some details with different countries and at different periods, but human nature, the fundamental spring of all actions remains constant and shows a remarkable uniformity throughout. A proper understanding of that phase of human nature which specially manifests itself in the carrying on of a corporate existence should be an invaluable equipment to those who are engaged in the making or the maintaining of a nation. Philosophical historians have attempted to find the common principles and emotions which, operating upon men of every climate and degree of civilization, produce certain results. With their keen powers of observation and insight they gather a comprehensive view of our society, institutions and destiny. An attempt is made to collect in this book some of the very important observations made and far-reaching results arrived at by two notable French writers of eminence and perhaps not very well known to an ordinary English reader.

It is needless to add that the selection of these passages has been made with an eye to their applicability to the present conditions in India.

Price Re. 1-8-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*"
11, Vellala Street, Purasawalkum, Madras.

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM

OF

CEYLON CIVIL SERVICE

WITH AN APPRECIATIVE

FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5-8-0. (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"

11, VELLALA STREET.

Purasawalkam, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)